-பந்த-மண 3.1.49.

Regd: No. M. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

# உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

8 பக்கங்கள் | வாரப்பதிப்பு | விலை ஒரு அணா

வெடி 1. ] சென்னை, சனிக்கிழமை (1-1-1949) [ குண்டு 13

## திராவிட நாடு திராவிடருக்கே!

தனமனோகரன்

ஆரியத்தின் கூட்டுறவால், தேய்ந்துபோன—தாழ்ந்துபோன திராவிடம், இன்று தீப்பொறிபறக்க நிற்கிறது... 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற உரிமைப்பண்ணை உரத்த குரலிலே இசைக்கிறது, திக்கெட்டும் சிதறி ஓட முயலுகின்றனர், ஆரியர்கள்.

பன்னெடுங்காலமாக ஆரியத்திற்கு அடிமைப்பட்டிருந்த திராவிடர் தாங்கள்—உள்ளம் கெட்டு, உருவடி இழந்து, உலகோர் கைக்கொட்டி நகைக்கும் நிலை பெற்றதைக்கண்டு விழித்தனர் வீறுகொண்டனர், அடிமையாயிரோம், சூழ்ச்சிக்கு இடந்தரோம் என்று முழக்கமிட்டு வெளிக்கிளம்பலாயினர். ஒத்த உணர்ச்சி உள்ளங்கள் தோறும் ஊதி எழுந்தது. எவை எவை மக்களை அடக்கி ஒடுக்கி வாட்டுவதற்குக்காரணமாக இருந்தனவோ, அவற்றை எதிர்த்து நிற்க ஒன்றுகூடிய உணர்ச்சி ஆங்காங்கு இன உணர்ச்சியாக மலர்ந்தது. அன்று எழுந்த, அந்த வீர முழக்கந்தான் இன்று திராவிடநாடு திராவிடருக்கே என்று திருந்தி முழக்கப்படுகிறது, கேளாக்காதினருக்குக் கேட்கும்படி.

'திராவிடநாடு திராவிடருக்கே'! என்று திராவிடர்களாகிய நாங்கள் சொல்லுவது வெறும் வார்த்தை அலங்காரமல்ல! திராவிடநாடு விழிப்படைந்து விட்டது என்பதற்கான அறிகுறி; தாழ்த்தப்பட்ட சமுதாயம் தன்னிலை அறிந்துகொண்டு தன்னை ஏமாற்றிப்பிழைக்கும்—அண்டிப்பிழைக்கும் மாற்றாரின் பண்பையும் பக்குவத்தையும் அறிந்துகொண்டு, தான் வாழும் நாடு தனது என உணர்ந்துகொண்டு—அது தனக்கே உரிமையாம் என்பதை உரத்தகுரலில் உலகுக்கு! அறிவிக்கும் உரிமை முழக்கம் அது, திராவிடரே! தரணியாண்டோம், வாழ்விழந்தோம், உரிமையிழந்தோம், உணர்விழந்தோம், வீரமிழந்தோம், என்ற பயங்கர உண்மையை திராவிடருக்கு உணர்த்த—சரித்திரத்தில் திரையிடப்பட்டுள்ள பண்டைப்பெருமைகளை அறியவைக்க எழுந்த தன்மான முழக்கம் அது;

'திராவிடநாடு திராவிடருக்கே!' என்றால் தென்னாடு வடநாட்டிலிருந்து பிரியவேண்டும், ஆதிக்கம், வடநாட்டு ஆதிக்கம் அகல வேண்டும், கடவுள் பெயரால் திராவிடமக்களை ஏய்த்து வாழும் கூட்டம் ஒழியவேண்டும், மத வெறிமண் மூடிப்போகவேண்டும். தரணிபுகழ தனியாட்சி நடத்தவேண்டும் என்று தான் அர்த்தமேயொழிய பல்வேறுகட்சிகள் முழங்குவதுபோல் இது வெறும் அர்த்தமல்ல—பொருத்தமற்ற காட்டுக்கூச்சல் அல்ல.

எப்படி ஆங்கிலோ-சாக்சானியர்கள் இங்கிலாந்தைப்படையெடுத்துக் கைப்பற்றிய பொழுது, ஆங்கிலேயர்கள் 'இங்கிலாந்து ஆங்கிலேயருக்கே!' என்று கூக்குரலிட்டார்களோ, எப்படிதுருக்கிக்குள் உலகவல்லரசுகள் நுழைந்து அதன் மூலம் பயனடைய முயன்றபொழுது, மக்கள் 'துருக்கி துருக்கியருக்கே!' என்று முழங்கினார்களோ, எப்படி சீனாவை ஐரோப்பிய நாடுகள் துண்டு போட முயன்றபொழுது சீன மக்கள், 'சீனா சீனருக்கே' என்ற உரிமை முழக்கத்தை துவக்கினார்களோ, அதே போன்றுதான் திராவிடராகிய நாமும் வடநாடு நம்மை சுரண்டி நம்குரல்வளையைப்பிடித்து நெரிப்பது கண்டு ஆரியம் நம்மை ஏமாற்றிப்பிழைப்பது கண்டு அந்நியமொழியாகிய

### விட்டேனா.........?




ஏ! அனாத ரக்ஷகா, ஆபத் பாந்தவா, ஆதி சேஷ சயனா, உன் மகிமையை யாரறிவார்? உன்னைப்போல் வேடந்தாங்கவும் கூடுமா? இம்மாநிலத்து மக்கள்...ஆ......ஹா...பாவம்... பாவத்தை வீணாகத் தேடிக் கொள்ளுகிறார்கள்...இந்த நர ஜன்மங்கள்...நீ பொருமையோடு, வாய் திறவாமல் வீற்றிருந்தாலும் நான் எப்படி இருக்க முடியும், பக்தனான நான்...இருக்கட்டும், பார்க்கிறேன் ஒரு கை...சட்டமே இயற்றி உன் மானத்தை நான் காப்பாற்றுகிறேன்......விட்டேனா சினிமாக்காரர்களை...முதலமைச்சர் என்பதை இதில் காட்டியே தீருகிறேன்.

குறிப்பு:-2-8 பக்கங்கள் இடம் மாறி யிருப்பதைக் கவனித்து வாசித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்தி நம் நாட்டில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவது கண்டு திராவிடநாடு திராவிடருக்கே! என்ற கூக்குரலை எழுப்புகிறோம். இது தவறாகுமா? சிந்தனைகொண்டு பகுத்தறிவு கொண்டு பரிசிலனை செய்யுங்கள்.

நாங்கள் என்ன காங்கிரஸ் காரரிடம் யாசகம் கேட்கிறோமா? நாங்கள் ஆண்ட, ஆளவேண்டிய நியாயமான உரிமையைத்தான் கேட்கிறோம், இதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஒரு வீட்டுக்குரியவன் பக்கத்து வீட்டுக்காரனுடைய வீட்டுக்கும் தன் வீட்டுக்கும் இடையே சுவர் எழுப்பினால் பக்கத்து வீட்டுக்காரன் “ஏனப்பா! நீயும் நானும் ஒரே சாதி தானே, நான் என்ன உன்னை ஏமாற்றி உன் இடத்தைப்பிடுங்கிக் கொள்வேனா? உனக்கும் எனக்கும் உன்சசந்தியாருக்கும் என் சந்ததியாருக்கும் இது நாள் வரை எவ்வித மனத்தாங்கலும் இல்லையே! இது தகுமா?” என்று கூறி தடுப்பான்; அதே போன்றுதான் நாமும் வடநாட்டிலிருந்து தனியாகப்பிரிந்து சுய ஆட்சி நடத்த திராவிடநாடு திராவிடருக்கே! என்ற கூக்குரலை எழுப்புகிறோம்.

இன்று நாம் வாழும் திராவிட நாட்டின் நிலை என்ன? வடநாடு உயர்ந்தும் தென்னாடு தாழ்ந்தும் தானேயிருக்கிறது. ‘ஜலஉஷாக்கள்’ வடநாட்டானால் செய்யப்பட்டுத்தானே திரைகடலில் மிதக்கவிடப்படுகின்றன. வடநாட்டிலே வாணிபம் உண்டு, கூடகோபுரங்கள் உண்டு. மாடமாளிகைகள் உண்டு. வானைமுட்டும் யந்திரசாலைகள் உண்டு, காங்கிரசின் தலைமை பீடமே டில்லி தானே. ஜெயப்பூரில்தானே காங்கிரஸ் மாநாடுகள் கூட்டப்படுகின்றன

தென்னாட்டிலோ—டில்லியின் தாக்கிதை எதிர் பார்த்து ஏவல் புரியக்காத்திருக்கும் ஆரிய அடிவருடிகளும் விபீடணர்களும் உண்டு. தென்னாலிராமன்கள் உண்டு. 30 கோடிகட்கு மேற்பட்ட தெய்வங்கள் பலஉண்டு.48000ரிஷிகள் உண்டு. பல புண்ணிய ஆலயங்கள் உண்டு, பாண்டவர்கள் வந்துபோன பாதைகள் உண்டு, தெய்வானைத் தெரு உண்டு. சண்முகர் வீற்றிருக்கும் மலை உண்டு. தென்னாட்டான் உழைக்க வடநாட்டான் திண்டின்மேல் சாய்ந்து உல்லாசவாழ்வு வாழும்வகையில் தென்னாட்டு பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கிறது.

வளர்ந்து வரும் வடநாட்டு ஆதிக்கத்தை உணராமலிருப்பது ஆபத்தானதுதான்—ஆபத்தானது மட்டுமல்ல; திராவிடரின் வருங்கால வாழ்க்கையைங் சிதைத்து விடும் தன்மை வாய்ந்தது, இதனைத் திராவிடர்க் கழகம் நன்றாக உணர்ந்ததினால்தான் தன் நாடும் இதனை உணர திராவிட நாடு திராவிடருக்கே என்ற கூக்குரலை எழுப்பியது.

கையில கைராட்டினமும் இடுப்பில் கதராடையுடனும் காட்சியளித்த காந்தியடிகள் வாழ்ந்து வந்த நாட்களில் கூட முதலாளிகள் அவரிடம் தந்திரமாகவே நடந்து காரியங்களை சாதித்தனர். இன்று நாம் காணும் டாட்டா நகர் பிர்லா மாளிகை முதலியன காந்தியடிகளின் அத்தியந்த சீடர்களால்தான் நிறுவப்பட்டவை, நிலக்கரி முதலியன ஜம்ஷிட்பூர் டாட்டா நகரிலிருந்து வருகிறது. அரையங்குல ஆணிமுதல் பெரிய பெரிய இரும்புயந்திரங்கள்வரை அனுப்புகிறவன் வடநாட்டான் — வட நாட்டான்உதவியை எதிர் பார்த்து நிற்கவேண்டியவர்களாக இருக்கிறோம் நாம். மயக்கந் தெளிய மாற்றம் வேண்டும். பிர்லா அளவு உயர்ந்த வடநாடும்—தாழ்ந்த தமிழகமும் எப்படி ஒத்துழைக்க—வாழ முடியும்? தாழ்ந்ததலை கவிழ்ந்த தென்னாட்டைப்பிரித்தால் தான் குறைகளைக் கண்டு நீக்கி உயர்வாக்க முடியும். சின்னஞ்சிறிய நாடுகள் இயற்கை வளமற்ற நாடுகள் பொருளாதார வசதியற்ற கூட தனி அரசு பெற்றுவிட்டன, இங்கோ வளமான வயல்கள் பல நிறைந்த பொன்னாடு இயற்கை வளம்பெற்ற திராவிடம் வடநாட்டுடன் பிணைக்கப்பட்டு பிடி ஆளாகக் கிடக்கிறது.

அய்ரோப்பாவில் ஸ்பெயின் போர்ச்சுகல், ஸ்வீடன் ஜெர்மனி பிரான்சு இத்தலி அல்பேனியா கிரீஸ் துருக்கி ஈரான் ஈராக். இந்தியாவில்நேபாளம் முதலிய நாடுகள் தமக்குள்எல்லைக் கோடுகள் வகுத்துக் கொண்டுதரணிபுகழதனியாட்சி நடத்தல் வில்லையா? எத்தலைவர்களாவது இதற்கு மாற்றுகூறியிருப்பார்களா?

இன்று பாகிஸ்தான், பர்மா. சிலோன் காஷ்மீர் பிரிந்து நிற்கும் நிலைகண்டும் ஏன் திராவிடநாடு பிரிக்கக்கூடாது? எங்கள் நாடுஎங்களதே என்று கூறுவது குற்றமா? ஏன் வயலுக்கு வயல் வரப்புகட்டுகிறோம்—நாட்டுக்கு நாடு எல்லைவகுக்கிறோம்—வீட்டுக்கு வீடு சுவர் எழுப்புகிறோம் அதேபோன்றுதான் திராவிடநாடு திராவிடருக்கே! என்று கேட்கிறோம் உரிமையுடன்—உணர்ந்து உரையுங்கள் நல்லதீர்ப்பு.

பல்லில் நச்சுகொண்டபாம்பிற்கும் தனியாக புற்றுஉண்டு. தந்திரம் கொண்ட நரிக்கு வாழ தனி இடம் உண்டு. கொடூரகுணம் படைத்த வேங்கைக்கு சொந்தமான குகை உண்டு. ஆகாயத்தில் பறந்து திரியும் பறவையினங்களுக்குக்கூட கூடுகள் உண்டு. ஆனால்...; நமக்கென்றுநாடு ஒன்று உண்டா உரிமையுடன்வாழ பாம்பைப்போல் நச்சு மனப்பான்மையினராக வாழஅல்ல நரியைப்போல தந்திரமாக வாழ அல்ல வேங்கையைப்போல் இருக்க அல்ல மற்ற நாடுகளுக்கு முன்பு நாங்கள் மனிதரென்று தலையெடுக்க தனியாட்சி நடத்தத்தான், திராவிடநாடு திராவிடருக்கே, என்று கூறுகிறோம்.

அன்று அய்ரோப்பாவிலே ஜெர்மனி பிரான்சு தனிநாடு கேட்ட பொழுது யாராகிலும் கொடுக்க மறுத்தார்களா? மாணவத்தோழர்களைக் கேட்கிறேன்; ராமராஜ்யம், துருக்கி ராஜ்யம் ஏன் பிளவுபட்டது சொந்த எல்லைக்கோடு இல்லாத காரணத்தினால்தானே! ஐக்கிய இந்தியாஎன்று கூறுகிறீர்களே-புராண காலத்திலே- இராமராஜ்யம்—பாண்டவராஜ்யம் இருந்தகாலத்திலே இந்தியா ஒன்றாக இருந்ததாகக் கூற முடியுமா? ஏன் தயங்குகிறீர்கள்? திராவிடநாடு திராவிடருக்கே என்ற குரல் உரிமையுடன் கூடியவீரமுழக்கம் என்பதை உணருங்கள். மாணவத் தோழர்களே. நமது தாய்நாட்டின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை உடைத்தெரிவதே உங்களது பெரும் பணியாக இருக்கவேண்டும்–நமது உரிமை முழக்கத்தை மூலைமுடுக்கு

கற்பனை மேடையில்

# புரட்சி எதிர்ப்பு

## தேமதுரைத் தமிழோசை உலகெல்லாம் பரவுதல் வேண்டும்.

[உடுமலை. பி. எம். ஜான்]

இன்பத் திராவிடப் பெருங்குடி மக்களே! வீரங்கொழிக்கும் வாலிபர்களே!! தாய்மார்களே!!! வணக்கம் பல.

தேன்மாரி பொழிந்த இப்பந்தலிலே என்சொல்மாரி உங்களுக்கு கசப்பாக இருக்கலாம். ஆயினும் சுவையும்படி கொஞ்சம். அன்பாக’ பலவந்தமாக— ஆனால் அவஞசியார் இந்தியை நுழைப்பது போன்றல்ல-ஊட்டுகிறேன் சுவையுங்கள்.

“தேமதுரத்தமிழோசை உலகெல்லாம் பரவுதல் வேண்டும்;’ இன்பத் தமிழுக்கே தன் உயிரையே அர்பணித்த கவிஞர், கவிதைச் சோலையிலே, தண்டமிழ் கனி பறித்து, தரணிக்களித்த பாரதியார் ஆற்றிய அறிவுரை, நாட்டுக்குக் காட்டிய நற்பாதையிது. தனித் தமிழ் அஸ்திவாரத்திலே எழுதப்பட்ட சுதந்திரக் கோட்டையை நிர்மாணித்த சிற்பி. பாரதியாராவார். அன்றிருந்த பாரதியார் இன்றிருந்தால், நெஞ்சம் பதறியிருப்பார்; உளங் கொதித்திருப்பார்! கண்ணீர்விட்டு கதறியிருப்பார்! என்? எம்மொழிக்காக தன் வாழ்நாளெல்லாம் வீணாளாக்கி, நற்பணியாற்றி நாட்டுக்குழைத்தாரோ, அம்மொழி இன்று ஆளவந்தோரிடம் அகப்பட்டுக்கொண்டு அலங்கோலப்படுகிறது.

உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, படுக்கப் பாயின்றி, பாருக்குழைத்து, உணர்ச்சியின்றி, உறங்கிக் கிடந்த மக்களை தட்டியெழுப்பி, உரிமை உணர்ச்சியூட்டி, நறுந்தமிழின் பெருமையை, கவிதைகளின் மூலம் எடுத்தியம்பி உலகுக்குணர்த்திய பாரதியார், தாம் நிர்மாணித்த சுதந்திரக் கோட்டையின் அடிப்பீடம் தகர்த்தெரியப்படுவதை காணாமலே உயிர் நீக்க நேரிட்டதும் நலமே. அன்று இன்பத்தமிழைப் பற்றி இனியமுறையிலே, உயர்ந்த நடையிலே, தெள்ளத் தெளிய எடுத்துச்சொன்ன சிலர், இன்று அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பதனால் தமிழுக்கு சதி செய்கிறார்கள்-அதுவும் திராவிட அமைச்சர்களே-என்றால், ஒவ்வொரு திராவிடனும் வெட்கி தலைகுனியக் கூடிய விஷயம்.

பத்தி பத்தியாக வரையும் பத்திரிகாசிரியர் சிலரும், கட்டுகட்டாக எழுதித்தள்ளும் கதாசிரியர்களும். பிற்போக்காளர் பட்டியலில் பட்டுக் கொண்டு அலறுகிறார்கள். வடநாட்டினரின்மொழி, தென்னாட்டினரின் மீது பலவந்தமாக திணிக்கப்படுவது என்? இலக்கியம், இலக்கணமற்ற இந்தி, செந்தமிழ் இலக்கியச் சோலையில் உலாவும் தமிழனுக்கு என்வேண்டும்? இதனால் தென்னாட்டுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன? இந்தி வந்தால் தமிழ்க்கலையின் கதி என்ன? வடமொழி வேண்டுமென்று வாய்கிழிய கத்தும் ஆட்சியாளர்கள், இதற்கு விளக்கம்தர முன்வரவில்லை. வாங்கும் சம்பளத்திற்கு வகை செய்யத்தான் வம்பளக்கிறார்களேதவிர நாட்டின் நலத்தைக் கருதியல்ல.

மக்களுக்கு வேண்டுவதுயாது? மக்களால் விரும்பபடுவதுயாது? மக்களுக்கு மன்னன் செய்யும் கடமையாது? என்பதை உணர்ந்து ஆட்சி புரிவதுதான் ஆளவந்தோரின் அறிவுடமையும், மக்களாட்சியின் மாண்புமாகும். இதல்லாது மக்களால் விரும்பப்படாதமொழியை மக்கள்மீது பலாத்காரமாக சுமத்துவதென்றால், இது சுதந்திரமா? சுயதந்திரமா எனகேட்கிறோம். இந்திவேண்டுமென்று. அரியாசன மீதமர்ந்திருக்கும் அமைச்சர்களும், நாட்டை நல்விக்கத் தோன்றி படுகுழியில் தள்ளப்பார்க்கும் தேசியத்தாளாசிரியர்களுந்தான் ஓலமிடுகிறார்களேதவிற, மக்களல்ல. “மக்களுக்காகவே மன்னன்” என்ற முறையில் ஆட்சி செலுத்தவேண்டிய ஆட்சியாளர், மக்களின் மாண்பிலே, நாட்டின் நலத்திலே, தமிழகத் தழைப்பிலே, பைந்தமிழின் பண்பிலே, வாட்டமில்லாது நாட்டமுடன் கண்ணும் கருத்துமாய் கவனிக்கவேண்டிய “நமது சர்க்கார்” மக்களை மடையர்களாக்குவதிலும், நாட்டை நாசப்படுத்துவதிலும், தாய்மொழியாம் தமிழை, குழிதோண்டி புதைப்பதிலும், அல்லும் பகலும் அரும் பணியாற்ற, கவனம் செலுத்துவதையெண்ணி அழுவதா? அஞ்சுவதா என்றே தோன்றவில்லை.

அறிவைக்கொண்டு அறியாத அவனாசியார் சொல்லலாம், கருத்தைக் கொண்டு கவனியாத காமராஜர் சொல்லலாம், தமிழ்ப்பண்பை பகுத்தறிவுடன் பார்க்காத பக்தவச்சலம் சொல்லலாம், இந்தி வேண்டுமென்று-ஆனால். உடலில் தமிழ் இரத்தம் பெருக்கெடுத்தோடும் ஒவ்வொரு தமிழனும், கூறமாட்டான்.

களிலுள்ள பாமர மக்களும் அறியச் செய்ய வேண்டும். அன்று ஆட்சி செய்த சேரசோழபாண்டியர் காலத்திலே-இராணி மங்கம்மாள் காலத்திலே-வீரன் கட்டபொம்மு காலத்திலேகூட டில்லி நமக்குத் தலைநகராக இருக்கவில்லை என்ற உண்மையை மக்கட்கு உணர்த்தவேண்டும்,

முடிவாக ஒரு வார்த்தை!

திராவிடநாடு திராவிடர்க்கானால். ஆரிய ஆதிக்கம் அடங்கும், வடநாட்டார் திமிர் குறையும் பொருளாதார நிலை சீர்படும், அறிவை அடக்கும் அவதி நீங்கி பகுத்தறிவு பிறக்கும் நம் நாடும்—நாட்டு மக்களும் விஞ்ஞான வேகத்தில் முன்னேறுவர்; புதிய சமுதாயத்தை நிறுவுவர்!

திராவீட நாடு திராவிடருக்கே!

மவுண்ட்ரோட். வ. உ. சி. வாலிபர் கழக
முதலாண்டு விழா.
2-1-1948 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு
கார்ப்பரேஷன் முஸ்லீம் பாடசாலை
சேப்பாக்கம், சென்னை
தலைவர்:-அப்துல் ஹமீத்கான் M. L. A, M. C.
பேச்சாளர்கள்
க. அன்பழகன், M. A.
ஆசிரியர் புதுவாழ்வு,
இரா. நெடுஞ்செழியன் ஆசிரியர் “மன்றம்”
க. அப்பாதுரை பிள்ளை M. O. L, B. O. L.
கொ. மோ. ஜனார்த்தனம்
ஒலிப்பெருக்கி உண்டு அனைவரும் வருக!
C. N. ஜெயவேல் செயலாளர்

இந்தி வேண்டுமென்று. தனிப்பட்டவருடையவும், ஒரு இனத்தவருடையவும் வாழ்வில் "மொழி" யென்பது இன்றியமையா இடம் பெற்றவை, எனவே அது விஷயத்தில், ஒரு இனத்தவர்மீதோ அல்லது சபைமீதோ அவர்கள் சம்மதமில்லாது அதனை புகுத்தக்கூடாது" இது நாம் கூறுவதல்ல, அரசியலமைப்பு மன்றத்தில் பண்டிட் நேரு கூறுவது, இவர்மட்டுமல்ல, சென்ற இந்தி எதிர்ப்பிலே, அமைச்சராய் இருந்து எதிர்ப்பாளருக்கு தடியடி "சப்ளை" செய்த ஆச்சாரியார், விஞ்ஞான விற்பன்னர் சி. வி. ராமன், டி டி. கிருஷ்ணமாச்சாரியார், இந்தி பிரச்சார தலைவர் சத்தியநாராயணு, பூலாங்குறிச்சியில் புதுமைத் தோற்றமளித்த காமராஜர், லயோலா கல்லூரியில் முழக்கம்செய்த சீதாராம ரெட்டியார், கொண்டா வெங்கடைய்யா, ச. சோ. பாரதியார், எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் இன்னும் பல அறிஞர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்! கேட்டாவது அவனுசியார் தன்தவரை உணர்ந்து, திருந்த வேண்டாமா? தன் பிடிவாதத்தை விடவேண்டாமா? சுயநலத்திற்காக நாட்டை காட்டிக்கொடுக்கத் துணிந்த அவனுசியார், பதவிமோகம் பற்றியிழுக்க, நினைவிழந்து, நிலைதடுமாறி பிதற்றுகிறார், 'இந்தி கட்டாயபாடமல்ல. ஆனால் இந்தி படிக்காதவர்களுக்கு வேலையில்லை' என்று. அதன் அர்த்தம் என்ன? சிறிது சிந்தனைக்கு இடங்கொடுத்து சிந்தித்து பாருங்கள் தோழர்களே! அவனுசியாரின் அனுவசிய அர்த்தமற்ற வாதத்தை-ஒருவேளை உண்டிக்கும், மலர்மாலைக்கும், வாய்பந்தல் புகழ்மாலைக்கும், ஆசைப்பட்டு மேடைஏறி, 'இந்தி படியுங்கள்' என்று உபதேசிக்கும் உத்தம தேசிய தோழனே! சுதந்திரம் சுதந்திரம் என்று துள்ளிக்குதிக்கும் சூரனே! உன்னைத்தான் அறைகூவி அழைக்கிறோம். 'வடநாட்டுஇந்தி தென்னாட்டுக்கு தேவைதானு' என்பதை இனியாவது ஆராய்ந்தறியும்படி. சென்றவிடமெல்லாம் இந்தி எதிர்ப்பை கண்டு கதிகலங்கிய அவனுசியார், உடுமலை உயர்நிலைப் பள்ளிக்கு வந்தபோது வாய்மூடியாகிவிட்டார். காரணம், வழியில் கம்பீரமாய் மறித்து எதிர்ப்பை எடுத்துக்காட்டிய கருப்புக்கொடிதான். மக்களாட்சியில் உரிமையை கேட்பது குற்றம்! மேடையில் பேசுவது குற்றம்!! எழுத்தோவியத்தில் உண்மையை எடுத்துக் கூறினல் குற்றம்!!! உடனே 144! தடியடி சிறைவாசம்! என்னே மக்களாட்சியின் மாண்பு! என்னே ராமராஜ்யத்தின் சிறப்பு!! என்னே ஜனநாயக ஆட்சி!!! அன்ன நடை, மின்னலிடை, பின்னல்சடை, தாமரையை யொத்த முகம், மான்விழி, தேன்மொழி, இவ்வழகுடன் தோற்றமளிக்கும் இந்தி விபசாரியின் உருவம் கண்டு மயங்கினர் கருத்தழிந்த ஆட்சியாளர். ஆனால் நடையில்நாசம், நாவிலேநஞ்சு, கண்ணிலே காமம், கருத்திலேகோரம், கொண்டஇந்தி விபசாரியின் இச்சைக்கு இணங்கமாட்டார்கள் திராவிடமக்கள். ஆட்சியாளரின் 144-க்கு அஞ்சோம், தடியடி சிறைவாசத்திற்கு அஞ்சோம், துப்பாக்கி குண்டுக்குகூட அஞ்சோம், வீரபரம்பரையிலுதித்த மாபெரும் லட்சிய வீரர்கள் நாங்கள், மறைவில் நின்று மாவீரனைக் கொல்லும் மதியீன குலத்தவரல்ல-வருங்கால உலகு வளம் பெற வேண்டுமானல்- வடநாட்டினரின் கூட்டுத்திட்டம்—சதித்திட்டம் — நம் நாட்டுக்கேற்றதல்ல, என்பதை பன்முறை எடுத்துக்கூறியிருக்கின்றோம். இதை ஆட்சியாளர் சிறிதும் சிந்தனையிலிறுத்தவில்லை. வீரராக விளங்க வேண்டிய அவனுசியார், விபீஷணராக மாறுகிருர்! விந்தையிலும் விந்தை ஆட்சியின் சூழ்ச்சி மிகுந்தபோக்கு. சென்னையில் இந்தி எதிர்ப்பு முழக்கம். இதன் எதிரொலி குடந்தையில்! 144 தடை உத்தரவு. எதிர்ப்பு ஊர்வலத்தில் தடியடி! பூட்ஸ்உதை! லாரியிலிருந்து தூக்கி எறிதல்! செந்தமிழ் காக்கும் செம்மல்களே! திரண்டுவாரீர் மறியல் களம் நோக்கி. சிறைச்சாலை நம்வரவை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறது. சிறைக்கதவுகள் நம்மைக்கண்டு சிறிக்கிறது. பன்னிப்பன்னி யென்னும் எட்டுக்கம்பிகள் எள்ளி நகையாடுகின்றன. துப்பாக்கி தோட்டா நம்மை துருவித்துருவித் தேடிக்கொண்டிருக்கிறது. தோழர்களே! வீறுகொண்டெழுங்கள். இந்தி விபசாரியின் அணைப்பைக் காட்டிலும், சிறைமாதின் அணைப்பு சிறப்புடையது இதோ! அறமெனும்வாள், குறளென்னும் கேடயம்; புறப்பட தயாராயிருங்கள், புத்துலகச் சிற்பி, ஈரோட்டு சாக்ரடீஸ் பெரியாரின் புதுமைக்கருத்துக்களும், புரட்சி கனல், தமிழக இக்பால், பாரதிதாசன் கவிதை முழக்கம் சிந்தனைச் சிகரம், தென்னாட்டு பெர்னாட்ஷா, அண்ணாவின் எழுத்தாற்றலும், நமக்கு அருந்துணையாய் அமைந்துள்ளது. களம் புக தயாராகுங்கள்.

# தீபத்தால் விளையும் தீமை.

ஐயோ! வம்பாடுபட்டு வயலில் குளைமிதித்து சேகரித்த காசை கட்டையிலே போறவன் முடிச்சவித்துக்கிட்டு போயிட்டானே. அவன் கண்ண விஞ்சு தெளாவ! என்ற கிராமியப் பெண்ணின் குமுறல். பிடி! பிடி! குழந்தைக்கைவளையலை திருடி விட்டான். 1½ சவரன்! விடாதேயுங்கள் என்ற உழையாச் சோம்பேறியின் உறுமல்.

ஐயா! புள்ளைக்காரி உட்கார கொஞ்சம் இடங் கொடுங்கள். வெகு தொலைவிலிருந்து நின்று கொண்டே வருகிருள். என்ற புகைவண்டிப் பிடயாணியின் கெஞ்சுதல்.

இத்தனை தொல்லைகளுக்கு இடையே திருவண்ணுமலையில் கூடுகின்ற கூட்டம் கோடானுகோடி. கார்த்திகை தீப தரிசனத்திற்குச் செல்லும் பக்த(அ)ர்கள் அத்தனை பேரும் தீப விரதப்பித்தலாட்டத்தை உணர்ந்து கொள்ளாதவர்களே! சிலர் உணர்ந்திருப்பினும், ஊரை ஏமாற்றுவதற்காக விரதமிருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்,

ஒரு சிலர் தங்கள் வருமானத்திற்கு வகை தேடிக்கொள்ளும் பொருட்டு பல பண்டிகைகளையும் விரதங்களையும் உண்டாக்கி அதன் பயனுகக் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத ஒரு உலகத்தை காட்டி ஏமாற்றுகின்றனர். எதார்த்த தமிழர்கள் அவற்றை அப்படியே ஒப்புக்கொண்டு விட்டனர். இத்தகைய பித்தலாட்டம் பொய்யுரைகளில் ஒன்றுதான் கார்த்திகை தீபம்.

தீப தரிசனத்திற்காகத் திருவண்ணுமலை சென்று அங்கு கோவில் கொண்டிருக்கும் அண்ணுமலையான் என்ற ஒன்றரை அடி உயரமுள்ள கல்லை கண்டால் மோட்சம் கிட்டுமாம். திருவண்ணுமலை செல்வதால் விளையும் தொல்லைகளையும், தீப விரதக்கதையின் பித்தலாட்டத்தையும் எண்ணிப்பாருங்கள்-

கனத்த மழை பெய்யும் காலத்தில் சிறிய கோவிலில் பல இலட்சக்கணக்கானமக்கள் கூடி ஒருவர்மேல் ஒருவர் இடித்தும் அடைத்துக் கொள்வதால் போதிய பிராணவாயுவை உட்கொள்ள முடியாது மயக்கமுற்று விழுந்து விடுகினறனர். தக்க சமயத்தை எதிர்பார்த்திருக்கும் எத்தர்கள் விழுகின்றவர்களைத் தாங்குவதைப்போல் தாங்கி காதிலோ கையிலோ இருக்கும் தங்க நகைகளைக் களவாடிச் சென்று விடுகின்றார்கள். இதனுல் பலர் பொருளிழந்து அண்ணுமலையான் அருள் என்ற மருள் பெற்று திரும்புகின்றனர்.

காலியாக உள்ள வீடுகளையெல்லாம் அதிக வாடகைக்கு எடுத்துக்கொண்டு, கற்பை விற்று காசு வாங்கி வாழ்க்கை நடத்துவதையே வாழ்வாகக் கொண்ட சில பெண்கள் வீதியிலே செல்லுகின்ற வெத்து வேட்டு மைனர்களுக்குத் தமது கண் வெட்டால் காமத்தையூட்டி மிலேச்சத்தனத்திற்களாக்கி இளைஞர்கள் வியாதிக்குட்பட்டு வீடுதிரும்புகையில் வேதனை யடைகிருன். இல்லை என்று எவரும் மறுத்துக்கூற முடியாது இத்தகைய நிகழ்ச்சிகளை, என் வேசிக்குக்கிடைக்கும் காசிலேயும் பங்கு வாங்குகிருன் சில கோவில் பூனைகளே. பல்லாயிரக்கணக்காண மக்கள் பசி 'பசி! என்று அலறஅன்னமிட அருகதையில்லை. ஆயினும் ஒன்றரை அடி உயரமுள்ள குழவிக்கல்லுக்கு 1½ டன் எடையுள்ள வெள்ளித் தேரில் பவனி அழகு, பச்சிளம் பாலர்கள் "பால் குடிப்பதற்கின்றி 'பாலோ பால் என்று அலறும் நேரத்தில் பாழும் கல்லுக்குப் பால் அபிஷேகம் அங்கு. எண்ணை என்பதையே கண்டறியாத ஏழைமக்கள் பரட்டைத்தலையுடன் வீதியில் திரிகின்றனர். ஒரு கரண்டி எண்ணை அவர்ளுக்குக் கொடுக்காது எண்ணற்ற அகல் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இத்தனையும் போதாதென்று தீபாவளியன்று விற்றதில் எஞ்சிய பட்டாசுகள் வீண்போகாதிருக்கும் பொருட்டு தீப தினத்தன்றும் விற்கப்படுகின்றன. வேட்டை வீசி எரிந்து விட்டு வீட்டிற்குள் ஓடுகிருன் சிறுவன்: வேட்டு விழும் இடம் அவனுக்குத் தெரியாது. வெந்து சாம்பலாகின்றது வெளிப்புறத்தே உள்ள குடிசை. தேவையா? இத்தகைய தீபம். இனி கதையை கேளுங்கள்.

அக்கினி என்ருெருதேவன். அவன் மனைவி பெயர் சுவாகதேவி. ஒரு நாள் அக்கினிதேவன் சப்த ரிஷிகளின் பத்தினி மனைவியைக்கண்டு மோகம் கொண்டானும், கணவனுக்குச் சாபம் ஏற்படும் எனப்பயந்து, வசிஷ்டன் மனைவி அருந்ததி உருவம் நீங்கலாக மற்ற ஆறுவித உருமாறித்தன் கணவனின் இச்சைகளைப் பூர்த்தி செய்தாள் இத்தகைய மாரிய உருவங்கள் தான் கார்த்திகை நட்சத்திரங்களாகக் காணப்படுவது. இப்பெண்கள்தான் சரவணப் பொய்கையில் சப்பிரமணியனை எடுத்து ஆறு உருவையும் ஒரு உருவாக்கியவர்கள்.

பக்த ஆஷாடபூதிகளே பகுத்தறிவு கொண்டு சிந்தியுங்கள். அக்கினி என்ருல் நெருப்பு எனப்பொருள் அந்த அக்கினிக்கு (நெருப்பு) ஒரு மனைவி உண்டென்ருல் எந்த பகுத்தறிவு உடையவனேனும் ஒப்புக்கொள்ள முடியுமா? அப்படி பகவானுல் இருந்தாலும் பார்வைக்கு உட்படும் பெண்கள் மீதெல்லாம் காமங்கொண்டு கசடனைப்போல் திரியலாமா! "பிறர் மனைபுகாமை அறமொக்கும்; தன் மனையாளைத் தனிமனையிருத்தி பிறன் மனை புகும் பேதையும் பதர்" என்ற முதுமொழிகள் என்னுவது? மேலும் இப்படிப்பட்ட கயவனுக்கு அவன் மனைவியும் உடந்தையாய் இருந்து பல உருமாறினுள் என்பது நம்பக் கூடியதா? ஒருக்கால் இப்படிப்பட்ட பொய்யுரைகளைப்புணைத்து எழுதிய ஆரியவர்க்கத்தின் பண்பாடாய் இருக்கலாம். அது நமக்குவேண்டாம். ஆகவே பார்ப்பனீயம் பித்தலாட்டத்திற்கு மண்டியிடாது. அண்ணுமலையான் திசைக்கும் அவன் பேரால் ஏற்றுகின்ற தீபத்திற்கும் வெறும் அரோஹரா ஒன்று இப்பொழுதே போட்டுவிட்டு அடியோடு மறந்து விடுங்கள் அடுத்துக் கொண்டாடுவதை.

# சினிமா படங்கள் 15000

## அடி நிளத்திற்குமேல் கூடாது.

1949ம் மருஷம் மார்ச் மாதம் 1 தேதி முதற்கொண்டு தணிக்கை செய்யப்படும் படங்கள் வஷயத்தில் இந்த விதி அமுலுக்கு வரும் என்று சர்க்கார் உத்திரவு செய்திருக்கிறது. இந்த நீள அளவில் அறிவு வளர்க்கக்கூடிய கல்வி படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

6-ம் பக்கத் தொடர்ச்சி.

கிருர்கள், ஆனல் இதைநான் வன்மையாக கண்டிக்கிறேன். ஏன் என்ருல், தேக ஆரோக்கியம் கவனிக்கும் சர்க்காராய் இருந்தால் சென்னை நகரிலே சைனுபஜார் நடைபாதையிலே வசிக்கும் மக்கள் அங்கேயே உணவு அருந்து கொண்டும் அங்கேயே மல ஜலம் கழித்துவதையும் மக்களுக்கு, ஏதாவது வழிவகை செங்ய லேண்டாமா, அது மட்டும் அல்ல மல ஜலம் கழிப்பதற்குக்கஉள் போதிய அளவு இல்லாமல் குளிப்பதற்க்கு குழாய் உடஇல்லாமல் காலரா உண்டவதற்கே தலமை இடமாக இருக்கும் செரிகளை சீர்திருத்தலில்லை. இன்னும் ரயில் போக வேண்டிய இருந்தால் 60, பேர் உட்காரும் இடத்தில் 600 பேர் உட்காருகிரார்கள் ஒருவரோடு. ஒருவர் மோதிக்கொண்டு இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் வேதனை படுகிருர்கள் இதனுல் தேக ஆரோக்கியம் பாதிக்கபடவில்லையா. இன்னும் தியேட்டர்களுக்குபோபனுல் மூட்டைபூச்சி தொல்லை. அதிகமாக இருக்கிறது காற்றுவசதியில்லை. அவை திருத்த வேண்டாமா அதை விட்டு விட்ட படத்தின் நீளத்தை குறைக்கிறேன் என்ருல் என்று சொல்லுகிரார்கள் எப்படி. முடியும் (சிலர் கேட்கலாம் மேல் நாடுகளில் 8,000 அல்லது7,000 அடியில் தயாரிக்க வில்லையர என்று) ஆனல் அவர்களுடைய பண்புநாகரீகம் வேறு. அவர்களுடையபாட்டுக்களையும் நடனங்களையும் குறுகிய அளவிலே உபயோகிக்கலாம். ஆனல் நம்முடைய நடனத்தையோ பாட்டையோ குறுகிய அளவிளே உபயோகித்தால் படத்தை படமெடுப்பார்களே பார்க்கும் நிலைமை எர்ப்படும் மேல் நாடுகளிலே கூட 2.0000 அடிக்குமேல் பல சமயங்களில் படம்தாரிக்கின்ருர்கள் குறிப்பாக ரோமியன் ஜூலியிட் காண்லித்தி விண்டு அத்தகைய படங்களுக்கு நல்லபுகழும், கிடைத்து இருக்கிறது. நம் நாட்டிலே அதிகசீர்திரத்தம்தோவைப் படுவதால்நல்லகருத்துகளையும் கொண்டபடம் எடுப்பதர்க்கு அதிகப்படி நீளம் கட்டாயம் தேவைபடும் ஆகையால் அரசாங்கம் இதில் இதில் சற்று கவனிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

ஆர். இராமச்சந்திரன்
திருவல்லிக்கேணி.

## ஏஜண்டுகளுக்கு

நாங்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் விற்பனையாளர்களில் ஒரு சிலரைத்தவிர மற்ற தோழர்களுக்கு மன மிரங்கியதாகத் தெரியவில்லை. அதனால் ஜனவரி 5 ம் தேதிக்குள் டிசம்பர்மாதம் முடிய ஏற்படும் தொகையை பாக்கியில்லாமல் எமக்கு அனுப்பித்து வைக்க தவிர்ந்தால் அத்தகையோருக்கு அதாவது பாக்கியாக உள்ளவர்களுக்கு பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதை வருத்தத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுவதுடன் உடனுக்குடனே வேறு ஏஜண்டையும் நியமிக்க ஏற்பாடு செய்யப்படும். மன்னிக்கவும்.

நிருவாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்
வாரப்பதிப்பு.

| சென்னை | சனி | 1-1-49 |
|---|---|---|

# சிறுவர்கள் புகைபிடித்தல்.

சிறுவர்கள் புகை பிடிப்பதினின்று தடுக்கப்படவேண்டியது மிகவும் முக்கியம். அதற்காக ஒரு சட்டம் கொண்டுவருவதும் வரவேற்க வேண்டியதேயாகும். ஆயினும் சட்டம் கொண்டுவந்ததினால் மாத்திரம் ஏதொரு நற்பயனும் கிட்டிவிடாது என்பதை எவரும் அறிவர். சட்டத்தின் விசேஷமும் மக்கள் அடையும் நன்மையும் சட்டத்தை அமுலாக்கி நடைமுறையில் கொண்டு செலுத்துவதில்தான் இருக்கிறது.

காலம் மாற மாற கருத்திற்கேற்ற சீர்திருத்தங்கள் தேவைதான். கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு சட்டத்தின் வாயிலாக, நாம் கோரிய பலன் அவ்வளவும் கிடைக்காவிடினும் ஏதோ ஒரு அளவுக்கு சமூகத்துக்கு நன்மை ஏற்படத்தான் செய்கிறது என்பது நாம் மறுக்க முடியாத உண்மை. சிறிதளவு வெற்றி கிடைத்து விட்டாலே பெரியதொரு காரியத்தைச் சாதித்து விட்டதாக நினைப்பதும் மக்களை நம்பச்செய்வதும் அவ்வளவு நியாயமாக ஒத்துக்கொள்வதிற்கில்லை.

மலையைத்தோண்டி பெரும் எலியைப்பிடிப்பதைக்காட்டிலும் வளையைத்தோண்டி ஒரு சுண்டெலி பிடிப்பதே சாலச்சிறந்ததாகும். சமூகத்தில் ஏற்பட்டாக வேண்டிய சீர்திருத்தங்கள் யாவையும் சட்டங்களின் மூலமாகவே செய்து விடலாம்என்பது வீண்மனக்கோட்டை. சில குறிப்பிட்ட விஷயங்களில் சமூக சீர்திருத்த வாதிகளால் ஏதேனும் செய்ய இயலுமே தவிர சட்டங்களில் ஒரு கடுகளவும் சாதிக்க முடியாது. ஆயினும் சீர்திருத்தக்காரரின் முயற்சி வெற்றிபெற சட்டங்களும் வந்துதவ வேண்டிய காலமும் உண்டு. காலத்தை அறிந்து சட்டத்தை கொண்டு வருவதே நலம். விஷயத்தின் தாரதம்மியத்தை செவ்வனே கண்டறிந்து சட்டத்தைக் கொண்டு வருவதே போற்றத்தகுந்ததாகும். ஆட்சித்திறன் என்பதற்கும் அறிகுறியாகும். காலத்தை அறிந்து சமயத்தைக் கைக்கொண்டு பயிரிடுபவனே அனுபவசாலி. அவசரமும் ஆவேசமுங்கொள்வது அலங்கோலமாகவே முடியும். சேகரித்து வைத்திருந்த விதைக்குத்தான் விரையம். நாட்டில் உள்ளோர் எள்ளிநகையாடவேண்டிய நிலைமையைத்தான் எதிர் பார்க்க முடியும். இந்நிலையை தவிர்க்க வேண்டியது சட்டத்தை புகுத்தும் ஆட்சியாளரின் கடமையாகும்.

அன்றிருந்த உடன் கட்டையேறும் கொலைபாதகச் செயலைத் தடுக்க கடுஞ்சட்டமே தேவை. இப்பழக்கம் சட்டத்தால் தடுத்தாகவேண்டியதும் தடுக்கக் கூடியதுமாகும். இச்சட்டம் முற்றிலும் வெற்றிபெற்றதில்வியப்படையகாரணமில்லை. நாளடைவில் சட்டத்துக்கே தேவையில்லாதபடி மக்களே இப்பழக்கத்தை நிறுத்திக் கொண்டார்கள். அதுமாத்திரமல்ல அவ்வித பழக்கத்தையும் வழக்கத்தையும் ஆதரித்து வந்தவரும் சாஸ்திர சம்மதமெனவே கட்டிச் சோறுடன் லண்டனுக்குச் சென்றவர்களும் இன்னும் இருந்தால் இவர்களை, உடன் கட்டையல் ஆனால் தனிக்கட்டையே யேறச் செய்யும் அளவுக்கு முன்னேறி விட்டனர் நம் பெண்மணிகள். ஆனால் அது காலத்திலோ கன்னிப் பெண்கள் கிடைக்காமல் விதவைகளைக் கல்யாணம்செய்து கொள்ள வேண்டிய அளவுக்கு ஆண் பெருக்கம் இல்லாமலிருந்திருக்கலாம். விதவைகளைக் கல்யாணஞ்செய்து கொள்ளலாமா என்ற பிரசினையை சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படாமலிருந்திருக்கலாம் அல்லது மறுகல்யாணமில்லாமல் விதவைகளைச் சமூகத்துக்குள் விட்டுவைத்தால் விபசாரத்துக்கு வழியேற்படலாம் எனவும் அஞ்சியிருக்கலாம். அல்லது ஜனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழியாகவும் கொண்டிருக்கலாம். கொலை பாதகச் செயலென்றோ, அநாகரீகமென்றோ, அறுவறுக்க வேண்டியதென்றோ அவர்கள் சற்றேனும் கருதியிருப்பார்களேயானால் இவ்வழக்கம் கொண்டிருக்கக் காரணமேயில்லை. சாஸ்திர சம்மதமெனவும், தெய்வசம்மத மெனவும், பாவ புண்ணியத்தின் பேராலுமேயல்லவா அனுசரித்து வந்திருக்க வேண்டும்? இக்கொடிய செயலுக்கும் மக்களின் ஆதரவு, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினிடமிருந்தாவது இருந்து தானேயிருக்கும். அப்படி ஆதரவு இருந்திருக்க முடியாதென்றால் சட்டம் கொண்டு வந்து அதன் வாயிலாகத் தடுத்தாக வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

ஒவ்வொரு பழக்கத்துக்கும் வழக்கத்துக்கும் அவ்வந்த காலத்துக் கேற்ப வண்ணம் தனிப்பட்ட காரணங்கள் இருந்துதானிருக்கும். இந்நாளில் பல நாடுகளும் கர்ப்பத்தடை கொண்டாகவேண்டும் என தீவிர பிரச்சாரம் செய்யத் தடங்கியிருப்பது எக்காரணத்தைக் கொண்டு? ஆனால் மாறு ரூபத்தில் அவ்வளவு தானே வித்தியாசம் அதனால் ஒவ்வொரு காலத்திலும் அவ்வந்தகாலத்தில் வகித்து வந்த பழக்க வழக்கம் ஒவ்வொன்றுக்கும் காரணம் இல்லாமலிருக்க முடியாது. அதைக்கண்டு பரிகசிப்பதற்கு இடமேயில்லை.

அப்படியிருந்தும் இக்கேட்டை களைந்தெறிய சட்டந்தான் தக்க வழியாகும். சீர்திருத்தக்காரரை நம்பியிருத்தலும், சில ஐதீகப்பிடுங்கல்களுக்குப் பயந்து நிற்பதும் கோழைத் தனத்தையே காட்டுவதாகும். இது விஷயத்தில் சட்டம் முற்றிலும் வெற்றி பெற்றது.

விபசாரம் செய்வதும் அதையே சில பெண்கள் தொழிலாகக்கொண்டிருப்பதும் எந்த நாகரீக நாட்டுக்கும் அழகல்ல, காட்டு மிராண்டித் தனத்தையே எடுத்துக்காட்டும். விபசாரத்தைத் தடுக்க சட்டத்தை இயற்றினர். ஒரு அளவு நன்மை ஏற்படாமலில்லை. எவ்விதத்தில்? பகிரங்கம் என்ற நிலை மாறிற்று என்றதே தவிர மற்ற வைபவங்கள் யாவும் எப்பொழுதும்போல் கிரமமாக ஏதொரு குறைச்சலும் இல்லாத வண்ணந்தான் நடந்தேறி வருகின்றன எனச் சொல்வதற்கும் முடிவு கட்டுவதற்கும் போதிய அத்தாக்ஷிகள் இல்லாமலில்லை. வசூலாகும் அபராதங்களே போதிய சாட்சியாகும்.

ஊருக்குத் தொந்திரவு இல்லாமல் தனித்தொரு பக்கம் கட்டப்பட்டிருந்ததேன்கூண்டை, தேனெடுக்க வகைதெரியாமல், நிலத்தின் மீதிருந்தே நீளக்கோல் கொண்டு குத்த, அத்தேன்கூண்டை அண்டியிருந்தஈக்கள் அவ்வளவும் ஊரெல்லாம் பரவி ஊராரைக்கொட்ட, ஊராரும் அவதியும் அல்லலும்பட நேர்ந்த கதையையேயொக்கும்.

இது சமயத்தில் மேலும் விளக்கவோ விளம்பரப்படுத்தவோ அவசியமில்லை. நேயர்களுக்கோ, அதிகாரவர்க்கத்தினருக்கோ தெரியாததுமல்ல. சீர்திருத்த முடியாத அளவுக்கு பலகெடுதல்களும் ஊருக்குள் காட்டுத்தீபோல் பரவிவிட்டன என்பதைச் சொல்ல எக்காரணத்தைக் கொண்டும் அஞ்ச வேண்டியதில்லை.

இவ்விதமிருந்தும் சட்டத்தால் கெடுதி ஏற்பட்டதென்று சொல்ல முடியுமா ?எத்தகைய சட்டமும் இவ்விஷயத்திற்குப் பயன்படாமலிருந்தாலும் இருந்த நிலைமையில் சட்டம் வேண்டாமென்று சொல்லத்தான் வழியுண்டா ? அதனால் இக்குறிப்பிட்ட கெடுதலைத்திருத்த சட்டமியற்றினால் மாத்திரம் முடியாது. சமூக சேவையாளர் சேவை செய்தால் மாத்திரம் போதாது. ஆனால் வகுக்கும் வழியே திறம்பட அமைய வேண்டும். சமதருமமென வெளிக்குப்பேசி அந்தரங்கத்தில் கள்ளமார்க்கெட்டில் கொள்ளைலாபம் அடிப்பது போலல்ல. மறுமண மேன்மையை சிறக்கப் போகி தன் வீட்டிலேயே விதவைகளை சீறழியச் செய்வது போன்றல்ல. காதல் மணமே கருத்திற்கு ஏற்றதுஎனக்கத்திவிட்டு காரிகைகளை கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என வைப்பது போன்றல்லஎண்ணிப்பார்த்து உண்மையைத் ஒத்துக்கொள்ளவேண்டும். உற்றதைச்செய்ய வேண்டும். உள்ளொன்று வைத்து புறம்பமொன்று பேசிவரின் அது பிழைப்பு கெட்டதனமேயாகும். அதனால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது.

இனி விபசாரத்துக்குக் காரணமென்ன? என்பதைக்கவனிக்க வேண்டும். இயற்கைத் தூண்டுதலும் வசதியும், வறுமை, வயது, நிராதரவு முதலியவற்றை முக்கியமாகக் கொள்ளலாம். இக்குறைகளில் ஒன்றை நீக்கி மற்றதை விடுவதற்கும் இல்லை. எந்த சட்டமும் இக்குறைகளைத் தீர்த்துவிடத்தக்கவையாகாது. கொள்ளும் உபாயம் எல்லாவற்றிற்கும் பரிகாரமாக இருத்தல் வேண்டும். அது என்ன? எப்படி என்பதையே சிந்தித்துக் கைக்கொள்ள வேண்டும். இத்திசையில் பலனடைய ஆண்களின் ஆதரவைத்தான் நாட வேண்டும். ஆண்கள் பெண்களைக் கொள்வதில் சில குறிப்பிட்ட, கண்டிப்பான சட்ட திட்டங்களைப் புகுத்த வேண்டும், சட்டத்தை மீறியவர்களை கடுந் தண்டனைக்குள்ளாக்க வேண்டும்.

உதாரணமாக கல்யாணம் செய்து கொள்ளும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வயதில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வித்தியாசமிருக்கப்படாது என ஏற்படுத்தலே சிறந்தவழியாகும். 10 வயது வித்தியாசமென்றே கொள்வோம். 40 வயதுடைய ஒருவன் 30 வயது கொண்ட ஒரு மங்கையையோ அல்லது விதவையைத்தானே அடைய முடியும். இம்முறையில் குறைகள் நீங்கும். விபசாரத்திற்கான அவசியமும் தூண்டுதலும் குறைந்தே தீரும். இதைசற்று ஆழ்ந்து யோசிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—: (x) :—

# முட்டாள் பத்திரிகைக்கு முரட்டு ஆப்பு

ஆம். தகரடப்பாவின் ஓசை- மத வேறுபாடு வேண்டுமென ஒலமிடும் மட்டரக மண்டூகம். தாறுமாருக எழுதி அகப்பட்டதை சுருட்டும் ஒரு மேதாவியை ஆசிரியராகக்கொண்ட இதழ்.

நாஸ்தீகம்—ஆஸ்திகம். என்பதற்கு விளக்கம் தந்திருக்கும். அறிவிலியே கேள். புராண இதிகாசங்களே புரட்டி பயனில்லே. உன் புத்தியை புரட்டு. கண்டு திருந்து காலப்போக்கின்பால்.

மெல்லிய ஆடை அணிந்திருக்கிறீர்களே அது எது, என்று கேட்டிருப்பீர்கள், அது எங்கள் கைத்திறமை இந்திரன் தந்த வரபிரசாதமல்ல. என்று கூறியிருப்பார்கள். இமயம் வரை சென்று உங்களது இலச்சினையைப் பொறித்திருக்கிறீர்களே, அது எப்படி' என்று கடாவியிருப்பீர்கள் அதற்கு அவர்கள் அது கருடாழ்வார் கடாட்சத்தாலல்ல எங்கள் தோள் வலிமையினுல் என்று கூறியிருப்பார்கள் இன்னும் உங்களது இசை இன்பமாயிருக்கிறதே. அது எப்படி, என்று வினவியிருப்பீர்கள். நாரதர் தந்தியில் மீட்டிடும் தேவகானமல்ல; நாங்கள் கண்டுபிடித்த யாழின் தன்மையது' என்று கூறுயிருப்பார்கள். மீண்டும் அந்த யாழ் எது' என்று கேட்டிருப்பீர்கள். அது திருப்பாற் கடலில் கடைந்தெடுத்த தல்ல; எங்கள் இசையறிவில் கடைந்தெடுத்தது என்று கூறியிருப்பார்கள். ஆபரணங்களே நோக்கி அது என்ன என்றிருப்பீர்கள். அது தேவலோகத்து சரக்கல்ல எமது தீரர்கள் கடல் முழுகி கண்டெடுத்தது; என்றிருப்பார்கள்.

இது, நீங்கள் கூறும் நாஸ்தீகர்களுக்கு அத்தகைய நினைப்பைதான் தரும். இதைகூட சிந்தித்து பார்க்கக் கூடாதா? அற்ப சுகத்துக்காக அரசியல் மண்டபங்களில் வீற்றிருக்கும் அமைச்சர் குழுவினர்களுக்கு தான் போதிய நேரமில்லே. நேரமிருந்தாலும் நெஞ்சிலே உரம்கிடையாது. நெஞ்சிலே உரம் இருப்பினும் அறிந்து கொள்ளும், ஆற்றல் கிடையாது. உம்மைபற்றிக்க வலேகொள்ளத்தேவையே இல்லே? முருகன் சன்னதியிலே சேவல் என படம்போடும் பகுத்தறிவற்றவர்களில் நீயும் ஒருவன் தானே-

எங்கேயோ இருக்கும் படேலின் பசப்பு வார்த்தையிலே, காந்தீயத்தின் கண் சிமிட்டலிலே, புலாபாய் வீசிய புன்முறுவலிலே, காமராஜின் கடைக்கண் வீச்சிலே, ஆசாத்தின் அழகு தாடியிலே ஜெயப்பிரகாசின் திடீர் முழக்கத்திலே மயக்குண்டு கிடக்கும் எம்முடைய சகோதர சகோதரிகள் உள்ளவரைக்கும் உங்களுக்குக் குறைவில்லேதான் கண்டிப்பாய்த் தெரிந்துகொள் ஆனல் அவர்கள் திருந்தும் நாள் வெகு தூரத்திலில்லே திருந்தி தப்பித்து உயிர் வாழ இதுதான் சமயம் அருணுவை காட்டி ஆஸப்பலிகளே பறித்து கொள்ள முடியுமே தவிற அவர்களின் இலட்சிய பாதையை தடை செய்ய இயலாது. தியாகி என்று காட்டி ஐந்து ஏக்கர் நிலம் பெற பயன்பட்டதே யொழிய சங்காதம் என சரடுவிட பயன்படாது. குருட்டு குதூஸ்கள் கருப்புச்சட்டை முஸ்லீம்களுக்கு எச்சரிக்கை என ஏட்டளவிலே எழுத உதவிற்றே தவிற எண்ணத்தை மறைக்கமுடியாது. குருட்டு குதூஸ் என்று எழுதியதிற்கு கோபித்துக் கொள்ளாதீர்கள் அவர் எழுதியிருப்பதை கண்டுதான் அவ்வாறு கூற வேண்டிவந்தது. பாருங்களேன்.

"சில ஆண்டுகளாக மதத்தின் பெயரால் முஸ்லீம் லீக் என்ற பெயருடன் பச்சை சட்டையை அணிபவர்கள் பாமர முஸ்லீம்களை ஏமாற்றி பாகிஸ்தான் கூச்சல் போட்டு பலன்கிட்டாமல் சும்மாகிடந்த சுயநல முஸ்லீம்கள் தங்களுடைய பச்சை சட்டையை உதரிதள்ளி தமிழ் நாட்டில் புதிய உடை புதிய நடை புதிய கோஷங்கள் போட்டு திராவிட கழகம் என்ற கருப்பு சட்டை கூட்டத்தில் சேர்ந்து கருப்பு சட்டையை போட்டு கொண்டு இஸ்லாம் மதத்திற்கு விரோதமான வகையில் சில முஸ்லீம்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் சுயநலக்காரர்கள் என்பது பாகிஸ்தான் கூச்சலிலே தெரிந்துவிட்டது."

இது, 12. 12. 48ந்தேதி வெளியான அதே வாராந்திர இதழில் காணப்படுவது பாகிஸ்தான் கூச்சலிட்டு பலனில்லேயாம். பாகிஸ்தான் பிரித்து தனி ஆட்சி நடத்துகின்றனர் 1947 ஆகஸ்டு 14ம் நாள் நள்ளிரவிலிருந்து. இது அறியாத அயோக்கியரை என்னென்றுதான் எழுதுவது? பாகிஸ்தான் கேட்டது சுயநலமாம். அண்டிபிழைக்க ஒண்டி குடுத்தனம் செய்யும் ஆசாத் கும்பல்களுக்கு பெயர் தேசிய முஸ்லீம்களாம்; கண்ணில்லாதவனுக்கு கண்ணுயிரம் என்று பெயர் வைத்துக்கொள்வது போல. மகாத்மாவை கொன்றது மட்டும் ஓர் முஸ்லீமாயிருந்திருந்தால் குதூஸ் கும்பல்களே கண்ணுலாவது காணமுடியுமா? ஆம்! அது ஓர் கோட்ஸேதான் இருப்பினும் விட்டார்களா குதூஸ் கூறும் பாமர முஸ்லீம்களே? ஈ. ரோடு போன்ற இடங்களிலும் இன்னும் மற்ற இடங்களிலும் முஸ்லீம்கள் அடைந்த அல்லல்களும் தொல்லேகளும் அவர்களுக்கல்லவா தெரியும்!

தோழர்களே! சேரன், செங்குட்டுவன் என்ற அந்தச் செம்மல் ஓர் முப்புரி மார்பினனான மாடலன் என்ற பார்ப்பன வலேயில் சிக்கி பகுத்தறிவை பாழாக்கிக்கொண்டான் என்ருல் பதைக்காதவர் யாருளர்? கிரேக்க வீரர் அலெக்ஸாண்டர் காலத்திலும் கோட்ஸே கும்பல்களின் வழி வந்தவர் ஓர் லுல்லுகபட்டர். நந்த பரம்பரயை மடியச்செய்து, சுங்க பரம்பரையினர் கை ஓங்க உதவியது ஓர் விப்பிர கூட்டம். சிவாஜியை அடக்கி ஆள ஓர் கங்கப்பட்டர் வங்க மன்னன் சிராஜ்-உத்தெளலா என்பவனுக்கு எதிரியாக ஒன்றுக்கும் உதவாகரையான உன்மத்தன் கிளேவினிடம் காசுக்காக பல்லேக் காட்டி நாட்டை காட்டிக் கொடுத்தவன் சிராஜின் உப்பை தின்ற அந்த தொப்பை பார்ப்பான் அமீத்சந்த் என்பான். இவ்வமட்டுமா?

வ. வே. சு, ஐயரின் திருநாமம் திக்கெட்டும் பரவவும், மீனுட்சி சுந்தரனுர் புகழ் மங்கவும்; சத்தியமூர்த்தி ஐயரின் குடும்பம் சல்லாபத்திலும் செக்கிழுத்த சிதம்பரம் பிள்ளேயின் குடும்பம் சீரழிவிலும், துரோகி கோபால் சாமிகள் கும்மாளம் அடிக்கவும் கொடிகாக்க மடிந்த குமரன்களின் சந்ததி வாழ வழியற்று போனதும், உறந்தை P. R. தேவர் நினேவு நாள் கொண்டாட ஓர் ராஜாஜி கிடைக்காவிடினும் பாரதியார் நினேவு விழாவுக்கு ஓர் வல்லத்தரசுகிடைத்த சரித்திரங்களும் உங்களுக்கு புரியாமலா இருக்கும்? ஐயோ இது தானு உலகம்!

தண்டச்செலவு தடியனே! உன் பத்திரிக்கை சர்க்காரால் டிக்லரேஷேன் செய்யப்பட்டு எத்தனே வருடங்கள் ஆகின்றன? எதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது? இத்தனே வருடங்கள் பத்திரிக்கை நடத்தாமல் எங்கு வாளாதிருந்தாய்? இது வரையும் எத்தனே அவதாரங்கள் எடுத்து இருக்கிருய்? உமது பத்திரிகையின் கெளரவ சந்தாதார்கள் யார்? உமது பத்திரிக்கையின் காரியாலயம் திருடர்கள் வீட்டு தீபம் என்கிருர்களே உண்மைதானு? நீர் ஓர் இந்து மகாசபைகாரன் என்கிருர்களே அதுவும் மெய்தானு? இவைகளுக்கெல்லாம் பதில் கிட்டுமா? கிடைக்காவிட்டால்தானென்ன, மறுமுறையும் சந்திக்கிறேன்.

வணக்கம் பல.

உன் சிந்தனேயை கிளறிய சிறுவன்.
அறிவழகன்.

# சமுதாயத்தில் அனேவருக்கும் சமத்துவம் வேண்டாமா?

இந்தியா தேசத்துக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனுல் சமத்துவம் இன்னும் கொடுக்கப்படவில்லே. இந்திய சமுதாயத்திலே வாழ்பவர்களுக்கு சமத்துவம் கொடுக்கப்படவேண்டியது மிகவும் முக்கியம் நாட்டின் பணத்தைக் கொள்ளே லாபமடிக்கும் கொள்ளேக்கார முதலாளிகளுக்கு பத்து அடுக்கு மாடி, பல்லாயிரக்கணக்கான சொத்துக்கள், நினேத்ததை செய்யக்கூடிய சக்தி, இவையாவும் உண்டு. உண்பதற்கு அரைவயிற்று உணவு, உடுப்பதற்கு ஒரு முழம்துணி, வசிப்பதற்கு ஓலே வீடு, கூரைவீடு இவைகளே, சொத்தாக உடையவன்தான் பாட்டாளிபரமசிவம். தொழிற்சாலேகளிலே வேலேசெய்யும் தொழிலாளிமக்கள் அரைவயிற்று உணவுடன் அவர்களுடைய மனேவி, மக்களுடன் வறுமைப்பிணியால் வாடவேண்டும். தொழிலாளிகளுடைய ரத்தத்தை உறிஞ்சி அவர்களுடைய, உழைப்பினுல் சம்பாதிக்கும் முதலாளி, மாடிவீட்டில், கோடிஸ்வரனுக வாழ்கிருன். இவைகளேப்பற்றி பொதுமக்கள் என்ன நினேக்கிருர்கள். ஆம், பிரம்மா அவரவர்களுடைய தலேயில் எழுதி வைத்தபடிதான் நடக்கும் நம்விதி நாம் வாடுகிருேம், அவன் பூர்வ ஜன்ம புண்ணியத்தின் பலன் பணக்காரனுக இருக்கிருன் என்று பொதுமக்கள் கூறும் அலவுக்கு நம் சமுதாயம் இருப்பது நமது துரதிஷ்டமாகும். நம் தமிழ்நாட்டில் சமத்துவம் அதிகம் கொடுக்கப்படவேண்டியவர்கள் பெண்கள்தான், ஆண்களுடைய அறிவீனத்தில்தான் பெண்களுக்கு போதிய சமத்துவம் கொடுக்கப்படவில்லே பலதாரவிவாகத் தடை மசோதா கொண்டுவந்திருப்பதற்காக சென்னே சர்க்காரைப் பாராட்ட விரும்புகிறேன் இந்த ஏழை, பணக்காரன், தீண்டப்படாதவன், போன்ற பல விதமான மாறுபாடுகள் நீதிமன்றத்திலும் சென்று குடிபுகுந்து விட்டது. பணக்காரன் ஒரு குற்றம் செய்தால் அவனுக்கொரு விதமான தீர்ப்பு, ஏழை குற்றம் செய்தால் அவனுக்கொரு தண்டனே. சிறைகளிலும் பணக்காரர்களுக்கு ஒருவிதம், ஏழைகளுக்கு மறுவிதம் ஆக வேறுபாடுகள் காட்டப்படுகின்றனர், பள்ளிகளிலும் வேறுபாடுகள் பணக்காரன் பரந்தாமனின் பிள்ளே என்ருல் ஒருவிதம் ஏழை ஏழுமலே பிள்ளே என்ருல் ஒருவிதம், இவ்வாறு நம் தமிழ்நாட்டில் மனித சமுதாயம் மிகவும் வேறுபாடுகளுடன் இருப்பதை நீக்கி அனேவருக்கும் சமத்துவம் அளிக்க முயற்சிசெய்ய வேண்டியது "நமது தமிழ்மக்கள் கடமையாகும். வேதங்களேப் படித்து தேர்ந்தவன் உயர்ந்தவனும், மற்றவர் தாழ்ந்தவர்களாம், கம்ப ராமாயணத்திலிருந்து கம்ப ரசத்தை எடுத்து எடுத்து அது காமரசமாக இருக்கிறது என்று தக்க ஆதாரங்களுடன் ராமாயணப் புத்தகத்திலுள்ள பாடல். ளின் நெம்பர்முதலியவைகளுடன் பாமர மக்களுக்கு விளக்கி அறிஞர் அண்ணுதுரை எழுதினுல் அதைக்கண்டு ஏன் சீற்றம் கொள்ள வேண்டும் சிறியமதி படைத்த சிறு குலத்தார். நவக்கிரகங்களேயும், ஆலமர அரசமரங்களேயும் பெண்கள் சுற்றுவதுடன், ஆண்களும் இப்பொழுது சுற்றி வருவதைப் பார்க்கிருேம் என்னே மதியீனம். மூட பழக்க வழக்கங்களே நீக்க நீங்கள் முயற்சி செய்யுங்கள், சமுத்துவ திராவிட நாட்டை ஸ்தாபிதம் செய்ய பணியாற்ற பலரும் வாருங்கள், பழைய மூடகதைகளினுல் மயக்கப்பட்டிருக்கும் பாமரமக்களுக்கு பகுத்தறிவு பிரசாரம் செய்புங்கள் வெற்றி காண்போம். வாழ்க நம் தமிழ் நாடு. வீழ்க அடிமைத்தனம். வந்தனம்.

இப்படிக்கு உங்கள் அன்புள்ள
J. ராமகிருஷ்ணன்.

## பெரியாருக்கு உபசாரப் பத்திரம்

### கார்ப்பொரேஷனில் தீர்மானம்

சென்னே, டிச, 30—

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களுக்கு சென்னே நகர சபையார் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்க வேண்டுமென்றும், இதற்கு செலவு வகைகளுக்கு ரூ 1000 அனுமதிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் கொண்டுவர விரும்புவதாக இந்நகர சபை உறுப்பினர்களான தோழர்கள் ஜீ' அப்துல் காதரும் எம். இரத்தினவேலுவும் மேயருக்கு அறிவிப்பு செய்திருக்கிருர்கள்.

1949.

நன்னுளாகிய இந்நாளில்
"உடுமலே பீரங்கி" யின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
யாவருக்கும்
உரித்தாகுக.

மூளைக்கு வேலை

# பகுத்தறிவுப் போர்க்களம் 2

**விஷயம்:—சினிமாப் பட நீளத்தை 15000 அடிக்குமேல் இருக்கப்படாதென்றும் ஓடும் நேரம் மூன்று மணி ஆகப்படாதென்றும் சர்க்கார் அவர்கள் சட்டம் கொண்டுவருவது அவசியமா? நியாயமா?**

## நேயர்களின் கருத்துக்கள்

அன்பு மிக்க ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். சென்னை சர்க்கார், சினிமாப் படங்களின் நீளத்தையும் நேரத்தையும் கட்டுப்படுத்தி உத்திரவு பிரப்பித்திருக்கிறது, அவசியமற்றதும் நேர்மையற்றதுமானது எனவே இவ்வுத்தரவை வன்மையாகக்கண்டிக்க விரும்புகிறேன். இப்பொழுது காட்டப்படும் அனேக தமிழ், தெலுங்கு, இந்தி எல்லாப் படங்களும் சுமார் 3 மணி நேரம் காட்டப்படுகிறது. ஏதாவது சில படங்கள் தான் 3½ மணி நேரம் அல்லது 4 மணி நேரம் காட்டப்பட்டு வருகிறது. சர்க்கார் உத்தரவுப்படி 1500. அடியில்படம் எடுத்தால் 2½ மணி நேரம் தான் ஓடும். மீதி ½ மணி நேரம் செய்திப்படங்களைக்காட்டுவார்களாம். பொதுமக்களுக்கு விருப்பமான, நடனம், பாட்டுக்கள், ஹாஸ்யம், இவைகளைப்படத்தில் புகுத்தினால் தான் பொது மக்கள் படங்களை ஆவலுடன் பார்ப்பார்கள். இந்த 15000 அடியில் முக்கிய கதையைத்தவிர மற்ற முக்கியமான பல அம்சங்களை படத்தில் புகுத்துவது இயலாத காரியம். நல்ல நீதிக்கருத்துக்களுடைய சமூகப்படமாயிருந்தால் பொதுமக்கள் 3¼ மணி நேரம் அல்லது 4 மணி நேரம்கூட உற்சாகத்துடன் படத்தைப்பார்க்கிறார்கள். இப்பொழுது, இந்தி. தெலுங்குபடங்களில் நூற்றுக்கு 60 படங்கள் சமூகப்படங்களாகவே தயாரிக்கிறார்கள். நம் தமிழ்ப்படமுதலாளிகளும்பழையபுராண புழுகுக்கதைகளைத்திரும்பத்திரும்ப தயாரிக்கும் வழக்கத்தை கைவிட்டு பொதுமக்களுக்கு அறிவு வளர்ச்சியும் நீதிக்கருத்துக்களையும், உடைய சமூக சீர்திருத்த படங்களையே இனி மேல் தயாரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பழையபுராணகதைகளை இனிமேல் பொதுமக்கள் பார்க்க மாட்டார்களென்று நிச்சயமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 3 மணி நேரத்துக்கு மேல் பொது மக்கள் படம் பார்த்தால் அவர்கள் தேக ஆரோக்யம் கெட்டுவிடுமென்று சர்க்கார் கூறும் காரணம் ஆதாரமற்றது என்பதே என் அபிப்பிராயம். சென்னை சர்க்காருக்கு உண்மையில் பொதுமக்களின் தேக ஆரோக்கியத்தில் அக்கரை இருந்தால், சினிமாவுக்குள், ஜனங்கள் புகை பிடிக்கும் வழக்கத்தை உடனே தடை செய்ய வேண்டும். சென்னையில் சினிமா கொட்டகைகளில் குறைந்த வகுப்பில் செல்லும் எழை தொழிலாளர், ஆகியோர் போதிய காற்று வசதியில்லாமலும், மூட்டைப்பூச்சிகளின் இஞ்செக்ஷன், உபத்திரவங்களினாலும் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர் குறைந்த வகுப்பில் படம் பார்க்க வரும் பொதுமக்களுக்கு போதிய சௌகரியம் செய்யும் படி' சினிமா கொட்டகை முதலாளிகளுக்கு உத்திரவு பிரப்பிக்க வேண்டியது சென்னை சர்க்காரின் கடமையாகும். பொதுமக்களின் பொழுது போக்கு சாதனங்களில் ஒன்றான சினிமாப்படங்களின் அடியையும், நேரத்தையும் கட்டுப்படுத்தி உத்தரவு பிரப்பித்திருப்பது சினிமா பார்க்கும் பொதுமக்களுக்கு இழைக்கும் அநீதியாகும் பொதுமக்களுக்கு விருப்பமான ஆபாசமற்ற, சமூகப்படங்களை 3½ மணி நேரம் அல்லது 4 மணி நேரம் பார்க்க பொதுமக்கள் விரும்புகிறார்கள். அவர்களுடைய பொழுது போக்கு படங்களின் நீளத்தை தடை செய்வது ஆட்சியாளருக்கு நேர்மையல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொதுமக்களின் நலனில் அக்கரை கொண்ட ஆட்சியாளர் "நம்பொணுகதைகளான புராணக்கதைகளையும், ஆபாசமான காட்சிகளையுடைய படங்களையும் தடைசெய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம் ஆட்சியாளர் ஆபாசமான புராணக்கதைகளை இனி மேல் படமாகத்தயாரிக்கக் கூடாது என்று உத்திரவு பிரப்பித்தால் நன்மை பயக்கும் .சென்னை சர்க்கார் இந்த 15000 அடிக்கு மேல் படம் எடுக்கக்கூடாது என்ற உத்திரவை உடனே ரத்து செய்யும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆட்சியாளர் பொதுமக்கள் தேகாரோக்யம் பாதிக்கப்படுவதை தடுக்க வேண்டுமானால் 4 மணி நேரத்துக்கு மேல் ஓடக்கூடிய 20000 அடிகள் கொண்ட படங்களை இனி மேல் தயாரிக்கக்கூடாது என்று சர்க்கார் உத்திரவு பிரப்பித்தால் அதனால் பொதுமக்களுக்கு நன்மை எற்படும். வணக்கம்,

உங்கள் அன்புள்ள

J. ராமகிருஷ்ணன்.

—:(x):—

ஆசிரியர் அவர்களுக்கு,

சினிமா படத்தின் நீளத்தை பதினைந்தாயிரம் அடியாக அரசாங்கம் குறைத்திருப்பது மிக மிக நல்லது ஏனென்றால் சினிமா படத்தின் நீளம் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவும் படம் ஆபாசமாக இருக்கிறது. மேலும் படத்தின் நீளம் அதிகம் இருந்தால் உபயோகமற்ற பல கட்டங்களை புகுத்தி விடுகிறார்கள். அதுமட்டு மல்ல நடனம் தேவையற்ற இடத்தில் நடனத்தைப் போடுவதும் அவசியமற்ற இடங்களிலே பாட்டையும் கேளிக்கைகளையும் உபயோகித்து படத்தை கொலைசெய்து விடுகிறார்கள். இன்னும் நம்முடைய தமிழ்ப் படங்களை சொல்லவே தேவையில்லை ஏனென்றால் இந்தியாவில் என்? உலகத்திலேயே கூட என்று சொல்லலாம். மிகப் பெரியதாகவும் ஆபாசமான கருத்துக்களை கொண்டதாகவும், ஆட்டம் துவங்கி முடிவதற்குள், ஆயிரம் முறை ஆண்டவன் வந்து வந்து போவதும் நம்பத் தகாத விதமான பல பொய்களைக் கொண்டதும் இன்னும் தேவாள உலகம் பாதாள உலகம், பேய் உலகம், பிசாசு உலகம், என்ற பல மோசமான கதைகளையும், தமிழ் படத் படத்தில்தான் காணமுடியும். ஆகவே தான் படத்தின் நீளம் அதிகம் கூடாதென்கிறோம். படத்தின் நீளம் குட்டையா யிருந்தால் படத் தயாரிப்பாளர்களும் புராணக் குப்பைகளையே படம் எடுத்து தள்ளாமல் பகுத்தறிவை உபயோகித்து நல்ல கருத்தைக் கொண்டதாகவும் சிறிய படமாகவும் மக்கள் விரும்பும் படமாகவும் எடுப்பார்கள். ஆங்கில படத்தை எடுத்துக் கொண்டால் 8000 அடி அல்லது 7000 அடிகளிலே கூட மிக நல்லப் படமாகவும் ஒழுக்கம் வீரம் காதல் இன்னும் தன்னாட்டு மக்களுக்கேற்ற நல்ல கருத்துக்களைக் கொண்ட படமாக எடுக்கவில்லையா? என் இவர்களால் மட்டும் முடியாது. அனுகுண்டு செய்யும் அமெரிக்க நாட்டிலே 8000· அடி போதும் குண்டூசி கூட செய்யத் தெரியாத இந்த நாட்டிலே 20,000ம் அடி தேவையாம்.

அதுமட்டும் அல்ல படத்தின் நீளம் அதிகமாய் 1 வருடத்திற்கோ அல்லது இரண்டு வருடத்திற்கோ ஒரு படம் எடுக்கிறார்கள். படத்தின் நீளம் குட்டையாய் இருந்தால் ஆண்டுக்குஇரண்டு படம் அழகிய முறையிலே தயாரிப்பார்கள். யாராவது பட முதலாளிகள் சமூக சீர்திருத்த படங்கள் எடுத்தால் அதற்கும் சென்ஷார் போர்டிலே இதில் கடவுளை தாக்கி இருக்கிறீர்கள். வகுப்பு துவேஷ மிறுக்கிறது என்று அந்த படத்தில் பாதி பாகத்தை கத்தரித்து விடுகிறார்கள். அல்லது படத்திற்கே தடை விதிக்கிறார்கள். இந்த லட்சனத்தில் எதற்காக பட நீளம் அதிகம் தேவை. மேலும் படம் அதிக நீளம் இருப்பதால் 3 மணிக்குமேல் ஆரம்பிக்க வேண்டிய பகல் காட்சியை 1 மணிக்கே ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் படம் பார்ப்பவர்கள் சாப்பிடாமல் கூட 12. மணிக்கே வீட்டை விட்டு கிளம்பி விடுகிறார்கள். இதனால் ஓட்டலிலே எதாவது பலகாரம் சாப்பிடுகிறார்கள் அது மட்டுமல்ல பணமும் அதிகம் செலவாகிறது உடல் நலமும் பாதிக்கப்படும் மேலும் 3. அல்லது நான்கு மணிநேரம் ஓடும் படமாயிருந்து விட்டால் உட்கார்ந்து பார்பதற்குள் இடுப்புவலி எடுத்துக் கொள்வது மட்டுமல்ல மூட்டைபூச்சி வேறு நம்மை தீனிக்கெடுத்துக் கொள்கிறது. ஆகவேத்தான் படத்தின் நீளம் 15,000 அடிக்கு மேல் இறுக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

வணக்கம் வி. கன்னன்.

திருவல்லிக்கேணி சென்னை.

—:(o):—

யுத்தத்தின் விளைவாக வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி யாகும் கச்சாபிலிம்குறைய ஆரம்பித்ததின் காரணமாகவும்—மேலும் சர்க்காரின் யுத்தபிரசாரபடங்களுக்கு தேவையாக இருந்தாலும் முன்பு கச்சா பிலிமை நீளகட்டுபாடு ஆக்கினர். ஆனால் தற்சமயம் சுவத்து பிலிம் கிடைக்கின்ற நேரத்தில் எதற்காக நமது அரசாங்கம் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை படம் பார்ப்பவர்களின் கண்கள் கெட்டுவிடும் என்ற தாராள எண்ணத்தினால் கட்டுப்பாடு அவசியம் என்று கறுதுமுர்களா? காலையிலிருந்து மாலைவரை கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு மாலை நேரத்திலாவது சற்று தன்னை மறந்திருக்க—சந்தோஷமாக காலம் கழிக்க படம் பார்க்மவருகிறான். அந்த நிலையில் அவன் படமானது குறைந்த நேரத்தில் காட்டப்படுவதை—கொட்டகையை விட்டு சீக்கிரத்தில் கிளம்ப வேண்டிய நீள கட்டுப்பாடும்படத்தை ஆதரிப்பானு நிம்மதியாக இருக்கலாம் என்று என்றுகிற அவனுக்கு அதிக நீளமுள்ள படங்களையே விரும்புவான் என்பதில் சந்தேகமே இல்லை நமது மக்களுக்கு அதிக நீளமுள்ள படங்களை விரும்பும் அளவிக்குறைந்த நீளமுள்ள படங்கலை விரும்புவததே இல்லை.

மேலும் நீளக்கட்டுப்பாட்டினில் (flash-back) பின் விழ்ச்சு முறைகளில் கையாளப்பட்டகதைகளைப் பாடுங்கள். அந்த கதையின் ரசனை—உணர்ச்சி-வேகம் குறைந்தது இடுக்கும் ஆகவே இந்த முழுநீள கட்டுப்பாடுகளையின் வேகத்தை குறைத்து விடுகிறது என்பதிலே தவறில்லை. குறைந்த நேரமுள்ள படங்களுக்கு மக்கள் தரும் ஆதரவை விட நீளமுள்ள படங்களுக்கு மக்கள் தரும் ஆதரவு அதிகம் என்று நான் கூறதேவையில்லை. சினிமா என்பது கலை என்ற எண்ணமாக மாறுகிறநேரத்தில்—நமது படமுதலாளிகளும் புராணப் படங்களை விடுத்து சமூகப்படங்களை எத்டுதது திருத்துகொண்டிருக்கிற நேரத்தில்—வெண்ணை வருகிற நேரத்தில் கலயம் உடைந்தார் போல்—நீளக்கட்டுப்பாடு வருவதால் கலை வளர்ச்சிக்கு தடைபடுகிறது மட்டுமல்லாது கலை உளகிற்கு நஷ்டம் வேறு செய்தவர்களாகிறார்கள் ஆகவே கட்டுப்பாடு தேவையற்றது என்றுகூறலாம்,

K. N. ஆனந்தன்,

ஏழுகிணறு, சென்னை.

—:(x):—

கட்டுப்பாடு தேவை!

கதையில் அனுவசியமாக-அவசியமற்ற நடனக்கச்சேரிகளையும்-பொருத்த மில்லாத முறையிலே சங்கீதத்தை புகுத்தியும் கச்சா பிலிமை கரியாக்கும் நமது பட முதலாளிகளுக்கு மிக மிக முக்கியமாகத்தேவை இந்த முழு நீளக்கட்டுப்பாடு! கலை வளரும் தன்மையுடையது-கலையின் வளர்ச்சிக்கு-இந்த முழு நீளக்கட்டுப்பாட்டினால் கலை வளர முடியாது என்று கூறுகிறார்கள் சிலர்! ஆனால் அவர்கள் நமது பட முதலாளிகள் தரும் படத்தில் கலையை காண முடிகிறதா அல்லது கலையின் மீது பழி சுமத்தி ஆபாச நடனங்களுக்கும் ஒரே விதமான 'காலிரைட்' காமிக்குகளும்—கதாநாயகிகளின் அங்கங்களுக்கு 'குளோசப்' தரும் காட்சிகளுக்கும் தேவைப்படுகிறது முழு நீளக்கட்டுப்பாடு என்பதை அவர்கள் உணருவார்களாயின் என்ன கூறுவார்கள் கட்டுப்பாடு தேவை என்று? மேலும் அன்னிய நாட்டுப்படங்களைப் பாருங்கள் அந்தப்படங்களின் கலைத்திறன்களும்— மேன்மையும்-சுமார் பதினைந்தாயிரம் நீளமுள்ள அடிகளிலேயே அடங்கிவிடுகின்றன! ஆகவே நமது படங்களின் அடிக்கட்டுப்பாடு இருப்பதினால் அனுவசியமான காட்சிகளைக்கண்டு கண்களை கெடுத்துக்கொள்வதும்-காலமும் வீணாகாது-பொருளும் அதிகமின்றி-கச்சா பிலிமும் கரியாகாது என்று கூறி கட்டுப்பாடு அவசியம் என வற்புறுத்துகிறேன்.

இப்படிக்கு

பி. தேவதாசன். சென்னை 1.

—:(x):—

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

பதினொராயிரம் அடி நீளக்கட்டுப்பாட்டை எடுத்ததின் காரணமாக சந்திரலேகா அபூர்வசிந்தாமனி போன்ற தலை வலிப்படங்கள் அதிகமாகி விட்டன! அத்தகைய படங்களினால் மக்களுக்கு கண் கெடுவதுடன்-பட முதலாளிகளுக்கு பண்ச்செவும்— காலமும் – தாமதமாகின்றன. ஆகவே நீளக்கட்டுப்பாடு மிக மிக முக்கியமாகவே தேவைப்படுகிறது. பதினைந்தாயிரம் அடி நீளமுள்ள படமானது சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் ஓடுகிறது. மேலும் அடி நீளமுள்ள படங்களினால் காலமானது மூன்று மணி நேரம் அல்லது மூன்றரை மணி நேரமாகிறது. ஆகவே பதினைந்தாயிரம் அடி நீளம் என்ற கட்டுப்பாடு இருப்பதிலே தவறுமில்லை-படத்தின் வேகமும் குறையாது. நமது பட முதலாளிகள் இந்தக்கட்டுப்பாடு திட்டம் இல்லாவிடில் அனுவசியமான படக்காட்சிகள் தயாரித்து வீண் அடித்து விடுகின்றனர். ஆகவே நீளக்கட்டுப்பாடு அவசியம் என்று கூறி பட முதலாளிகளும் இனி தேவையற்ற-கருத்தற்ற படங்களை தயாரிக்காது-கருத்துள்ள படங்களை தயாரிப்பார்களென்று நம்புகிறேன். வணக்கம்.

பி. காளிதாஸ். சென்னை.

—:(x):—

ஆசிரியர். அவர்களுக்கு.

வணக்கம்

நம்முடைய சர்க்கார் 15,000 அடிக்குமேல் படம், பிடிக்ககூடாது. என்று சட்டம் ஏர்படுத்தி இருக்கிறார்கள் ஏனென்றால் அதிக நீளமான படங்களை பார்த்தால், தேக ஆரோக்கியம் கெட்டபோய்விடும். மென்

3-ம் பக்கம் பார்க்க

# மொழி உரையாடல்

கன்னித்தமிழ்:—கட்டாய இந்தியே வருக! வணக்கம்.

கட்டாய இந்தி:—நமஸ்தே!

க. த:—தங்களின் சொந்த நாடு?

க. இ:—இந்தியா.

க. த:—அதுதெரியும் நீ கூறுவது. கடல் எப்படியிருக்குமென்றால் அதிலுள்ள தண்ணீர் உப்புகரிக்கும் என்று கூறுவது போலல்லவா இருக்கிறது உன் பேச்சு. உன் சொந்த நாட்டை கேட்டால்........

க. இ:—விளங்குகிறது விடும். கோபித்து கொள்கிறீரே என் சொந்த நாடு எனக்கென்று இல்லை. இருப்பது இதுவரையில் வடநாட்டில்

க. த:—எதற்காக திராவிட நாட்டில் சுற்றுபிரயாணம் செய்கிறாயோ?

க. இ:—என்னுடைய அழகும், அந்தஸ்தும் பார்த்து மக்கள் பின்பற்றுவதற்காக, அன்பர் அவனாசியாரும் அமைச்சர் முதன் மந்திரியாரும் என்னை அழைத்தார்கள். அதன் பொருட்டு வந்தேன்.

க. த:—அதன்பொருட்டா? ஓகோ! உன் அழகும் அந்தஸ்தும் பற்றி எவ்வளவுபேர் தெரிந்திருக்கிறார்கள்?

க. இ:—இந்தியாவில் பெரும்பான்மையாக.

க. த:—அதனால்தான் கலியாண மாகா கனம் அவனாசியார் தங்களை கண்டதும் சொக்கி விட்டார் போலும். முதன் அமைச்சரும் அதற்கு மூலாம் பூசுகிறார் போலும். நீ விபசாரிக்கு பிறந்ததென்பது பாபம் அவருக்கெப்படி தெரியும்.

க. இ:—அதிகமாக ஒன்றும் பேசாதே. யார் விபச்சாரி?

க. த:—நிறுத்தும் லம்பாடியே யாரிடம் நீ பசப்புகிறாய். கூறட்டுமா?

க. இ:—கூறும்.

க. த:—கேள் நீ பிறந்தவிதத்தை! மேல்நாட்டு இந்தி, கீழ்நாட்டு இந்தி, பிகாரி என்ற மூன்று விதம் உண்டா? இல்லையா?

க. இ:—உண்டு.

க, த:—நன்றாகக்கேள். மேல்நாட்டு இந்தியில். பங்காரு, பிரஜ்பாஷா கனோஜ். பந்தேலி. உருது உனவும்,—கீழ்நாட்டு இந்தியில் அவதி, பகேலி, சத்தீஸ்கரி எனவும்,—பிகாரியில் மைதிலி, போஜ்புரி, மக்கி எனவும் ஆக 11 வித இந்திமொழிகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லா விதமாய் பேசப்பட்டு வருகின்றனவா இல்லையா?

க. இ:—பேசப்பட்டு வருகின்றன.

க. த:—அப்படியிருக்க, இன்னும், சிந்தி-லந்தி-பஞ்சாபி-குஜராத்தி-ராஜபுத்னி-குமோனி-கடுவாலி-நேபாலி—உரியா-பங்காளி மராட்டி-சினா காஸ்மீரி கோகிஸ்தானி-சித்ராலி-திராகி-பஷை-கலாஷா-கவர்படி-இந்துஸ்தானி பார்சி ஆங்கிலம் முதலிய 22 க்கு மேற்பட்ட தனித்தனி மொழிகள் வடநாட்டில் பேசப்பட்டு வருகின்றனவா இல்லையா?

க. இ;—பேசப்பட்டு வருகின்றன.

க. த:—அதில் பிகாரியின் ஒன்றாகிய மைதிலி தானே நீ இந்தி என்ற பேரால் இங்கு வந்திருக்கிறாய். இப்பொழுது புரிகிறதா நீ விபச்சாரி என்று. இந்த லக்ஷணத்தில் "நீ என் அழகும் அந்தஸ்தும் பார்த்து அழைக்கிறார்கள்" என்று கூறுகிறாயே மானமில்லையா உனக்கு? உனக்கென்று நாடு சொந்தம்இருக்கிறதா? அல்லதுஉன்னை காப்பாற்ற ஓர் அறிஞன், புலவன் உண்டா? அழகைப் பார்த்து அழைத்தாராம் அன்பர் அவனாசியார். படேலின் துணை கொண்டு வந்தேன் என்று கூறேன். என் வெட்கமாய்இருக்கிறதா தன் நாட்டாரை காட்டிகொடுக்க. அம்பலத்திற்கு ஒரு நாள் வந்தே தீரும் என்று அறிவாய். யாரால் இங்கு வந்தாய் என்று; அதிக தூரத்தில் அல்ல-அருகில்தான் இருக்கிறது.

க. இ:—அதிகம் பேசாதே-பேசினால் என்னவாகும் என்பதை நீ அறியாயா?

க. த:—அறிவேன் அணங்கியே. அன்று உனக்காக ஆச்சாரியார் பட்ட அல்லலையும் அறிவேன். நீ இந்த நாட்டைவிட்டு ஓடி ஒழிந்ததையும் அறிவேன்- அன்று உமக்கு ஒத்து ஊதி தாளம் போட்ட ஊதாரிகளையும் அறிவேன். அறிந்துதான் மீண்டும் இங்கு குடி புகுந்தாயோ?

க. இ:—அன்று புகுந்தது அடிமை நாட்டில், இன்று புகுந்தது சுதந்திர நாட்டில், அன்று புகுந்தது ஆரியர் ஆச்சாரியாரால்-இன்று புகுத்தது உங்கள் இனத்தார் திராவிடர்களால் ஞாபகமிருக்கட்டும்.

க. த:—இருக்கிறது நாரியேஇருக்கிறது. அன்று அடிமை நாட்டில் சிறையில் அடைக்கலம் புகுந்து 1800 பேர்-அறிவு சுடர் பெரியார் சென்றது பெல்லாரி சிறையில். அதுமட்டுமல்ல-தாலமுத்து நடராஜன்கள் தந்தார்கள் இரண்டு உயிர்களை. இன்று எத்தனை பெரியார்கள் வேண்டும், எத்தனை தாலமுத்து நடராஜன்கள், எத்தனைவேலாயுதங்கள், எத்தனை கர்ப்பவதிகள் வேண்டும். ஆகையால் கூறுகிறேன் அணங்கியே நட இந்த நாட்டைவிட்டு.

க. இ.—எங்களிடத்தில் படைபலமிருக்கிறது.

க. த:—பார் புகழ் பாட்டாளியின் குறல் இருக்கிறது, எங்களிடத்தில்,

க. இ:—பத்திரிகைகள் பலமிருக்கிறது எங்களிடத்தில்.

க. த:—எவ்வளவு பத்திரிகைகள் எய்க்க இருந்தாலும், எதிர். நீச்சலாட எங்களிடத்திலும் அறிவு சுடர் பத்திரிகைகள் உண்டு அதை தாங்கிச்செல்ல எண்ணற்ற இளங்காளைகள் உண்டு எங்களிடத்தில்.

க. இ:—எங்களிடத்தில் ஆயுதபலமுண்டு எதிர்த்தோரை அடக்க.

க. த;—அதைத்தாங்கஅறிவுதோட்டாக்கள் உண்டு அள்ளி வீச.

க. இ:—எங்களிடத்தில் துளசிதாஸ் ராமாயணம் இருக்கிறது: உங்களை தூக்கி. பகவத் கீதை இருக்கிறது உங்களை பார்த்துக்கொள்ள. மகாபாரதம் உண்டு உங்களை மாய்க்க. கந்தபுராணம் உண்டு; உஙகள் முயர்ச்சியை கலைக்க. இதெல்லாம் இருக்கும் வரையில் என்னை ஒருக்காலும் அசைக்க முடியாது.

க. த:—அசைக்க முடியாது என்று கூறும் அறிவற்ற அணங்கியே கேள். எங்களிடத்தில் சிலப்பதிகாரம் இருக்கிறது உங்களை சிதற அடிக்க. மணிமேகலை இருக்கிறது உங்களை மட்டந்தட்ட. தொல்காப்பியம் உண்டு உங்களை தொலைக்க. அக நானூறு உண்டு உங்களை அலறவைக்க. பதிற்றுப்பத்து உண்டு பறக்கவைக்க. இன்னும் கேள். இதெல்லாம் ஒருங்கே சேர்த்து அமைக்கப்பெற்ற திராவிடரின் சேடயம் குறள் உண்டு என்பதை உணர்க. இந்த குவலயத்தில் நீ எங்கு சென்றும் மக்களை எய்த்து வாழமுடியாது. அப்போது முன் நீ கூறிய பொய்கட்டுரையெல்லாம் பொசுக்கப்படும் என்பதை நீ உணர்வாய்.

க. இ:—உணர்ந்துதான் அழைத்தார்கள் என்னை அதற்கு நீ யார்?

க. த:—உணர்ந்துதான் அழைத்தார்கள் என்று உறுமாதே அணங்காய். உன் கொட்டத்தை அடக்க இது ஓர் சூழ்ச்சி,

க. இ:— என்னசொன்னாய்? சூழ்ச்சியய்? உண்மையாகவா?

க. த:—ஆம்! உண்மையாகத்தான்.

க. இ:—எப்படி?

க. த;—எப்படியா? கேள், நன்றாக கேள். பிரிந்த திராவிடர்களை ஒன்று சேரவைக்க. உறங்கிய திராவிடர்களை தட்டி யெழுப்பியது. வடமொழியை வாயார புகழ்ந்த புலவர்கள் இன்று அம்மொழியை வெறுக்க வைத்து. தமிழ்கடல் மறைமலை அடிகளார், தமிழ்தென்றல் திரு. வி. க. சிந்தனையின் சிகரம் பெரியார் இவர்களை ஒன்று சேரவைத்து. ஆந்திரமும், மலையாளமும், கன்னடமும், தமிழகமும் ஒன்று சேர உணரவைக்க ஓர் வாய்ப்பு கிடைத்தது. ஆரியர்கள் மட்டும் என் இந்தியை கட்டுப்பாடாக ஒழுகவேண்டும் என்ற சிந்தனையை கிளறிவிட்டது. மற்றும் இந்தி ஆசிரியர்க்குமட்டும் என் அதிக சம்பளம், தாய்மொழியாம் தமிழ் ஆசிரியர்க்கு மட்டும் என் சம்பளக்குறைவு என்பதை உணர்த்திற்று. அதோ பார்! வாழ்க்கை பூங்காவில் உலாவ வேண்டிய இளங்காளைகள், மழையையும், வெய்யிலையும் போலீசாரின் அடக்கு முறையையும் பாராமல் அறப்போர் நடத்துவதைபார்! 9 மாத கெர்பவதியையும் பாராமல், கண்காணா இடத்தில் கொண்டுபோய் விட்டு வருவதையும் பார்' இவ்வளவுக்கும் காரணம் யார் என்பதையும் கூறுகிறேன் சற்றுகேள் உருக்கமாக. உரங்கிய எங்களை தட்டி எழுப்பினார் சிந்தனை சிகரம் பெரியார் அந்த அறிவு சுடர்களை அள்ளி அள்ளி வீசினார் அறிஞர் அண்ணா. மந்த மதியனரை, கேளாகாதினரை கேட்கும்படி. உறக்கக்கத்தினார் கோடை இடி நெடுஞ்செழியன். புதுப்புது கவிகளை அள்ளி வீசினார் புரட்சி கவிஞர் பாரதிதாசன். உரங்கிய திராவிடர் உணர்ச்சி பெற்று எழுந்து எங்களுக்கு விடைதாரும் போர் தொடுக்க என்றனர். இதோ புறப்படு என்றார் தளபதி அண்ணா. தொடுத்தோம் அறப்போரை, அதற்கு தலைமை தாங்கினார் சர்வாதி அண்ணா- ஆதலால் கூறுகிறேன் அணங்கியே நீ விடைபெற்றுக்கொண்டு இந்த நாட்டைவிட்டுபோவது ஆளும் அமைச்சரை கேட்டு அல்ல—அறிஞர் அண்ணாவை. நீ உயிர் தப்பலாம் என்று நினைப்பது சீறும் பட்டேலால் அல்ல-சிந்தனை சிற்பி பெரியாரால். ஆதலால் சிந்தி.

க. இ:—அதைத்தான் நானும்... சிந்...திக்...கிறேன்.

—: உ :—

## மந்திரங்கள் தமிழில்

சேலம் மாகாணத்திலுள்ள கோயில்களில் கூறப்படும் மந்திரங்கள் தமிழிலேயே இருக்கவேண்டும் என்று கோபிசெட்டி பாளயம் நகர காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

மலையாள முறையில் அசல் சிட்டுக்குருவிச் சக்தியால் செய்யப்பட்ட

# ஜீவானந்த ரஸாயனம்.

இது தாதுபுஷ்டிக்கு நிகரற்றது, இதன் இரகசிய சக்தி உங்களை பிரமிக்கச்செய்யும், நரம்புகளுக்கு முறுக்கேற்றி இரத்தவிருத்தியும் தருவதில் இணையில்லாதது.

இது சகலவிதமான நோய்களைத் தீர்க்கவல்லது. ஆண், பெண் சாப்பிடத்தக்கது. தாதுவிருத்தி, பலம், புஷ்டி, ஆயுள்விருத்தி உண்டாகும். நபுஞ்சகம், சொர்ப்பனஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டிப்பதில் சாலச் சிறந்தது. இதனை காலை, மாலை சிலநாட்கள் சாப்பிட்டு வந்தால் இளகிப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். தனக்குத் தெரியாமல் வீரியம் நீத்து ஸ்கலிதமாகுதல், நரம்புத்தளர்ச்சி, இரத்தமின்றி தேகம் வெளுத்துப் போகுதல், அஜீரணம், கைகால் சோர்வு, மயக்கம், இடுப்புவலி, பெண்சீக்குகள், மூல வியாதிகள், குன்ம நோய்கள், காஸம், க்ஷயம், பித்தப்பாண்டு வெள்ளை, வெட்டை, ஸ்திரீகளுக்குக்காணும் மலட்டு வியாதிகள் முதலிய பலவகையான நோய்களையும் கண்டித்து பலஹீனத்தையும் போக்கிவிடும். இரத்த சக்திக்கும், இரத்தவிருத்திக்கும், தசைவிருத்திக்கும், தாது பலத்திற்கும், ஜீவானந்த ரஸாயனம் காயகல்பமாகும். சாப்பிட ருசிக்கும். பத்தியமில்லை.

**1-பவுண்டு டின் 1-க்கு விலை ரூ. 5—0—0 இந்தியாவுக்கு தபால் சிலவு ரூ. 1-2-0**

இன்னும் எல்லாவித வியாதிகளுக்கும் விவரம் எழுதினால் மருந்து அனுப்புகிறோம்.

கவனிப்பு:—மருந்தின் கிரயமும்' தபால் செலவையும் சேர்த்து பூரா பணத்தை மணியார்டர் மூலம் அனுப்பிவிட்டால் மருந்தை ரிஜிஸ்டர் பார்சலாக உடனே அனுப்பிவிடுகிறோம்.

**எமது விலாசம்:**—மலையாள வைத்திய நிலையம், போஸ்டு பாக்ஸ் நெ. 53, மதராஸ். 1.

தொடர் கதை

# லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

: (x) :

[முன்வாரத் தொடர்ச்சி]

[ "பிவியார்" ]

சண்டை முடிந்ததும் இரு நாகரீக ஆண்கள் ஓடிவந்து குதூகலமாகத் தன் கைகளைப் பிடித்துக் குலுக்கியதும்; கத்தைக் கத்தையாக பண நோட்டுகளைத் தன் கையில் திணித்ததும்; மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் தன்னை வேலைக்கு அமைத்துக் கொண்டதும்; அவளுக்கு ஒரே பிரமிப்பாகவும் சினிமாப் படம்பார்ப்பது போலும் இருந்தன. தன்னைக்காரில் ஏறும்படி முதலாளியும் டைரக்டரும் மீண்டும் உபசரித்த போதுதான் அவளுக்குத் தன் உணர்வு வந்தது. தன் நிலைமையை உணர்ந்தாள். ஏனோ அப்போது அவள் மனதில் சந்தோஷத்திற்கு பதில் திகில்தான் ஏற்பட்டது. இருவர் முகத்தையும் பார்த்து, திறு திறு வென விழித்தாள். அவர்களோ பரமசாதுக்கள் போல் கள்ளங்கபடமற்ற தோற்றத்தில் அவளைப்புன்முறுவலுடன் பார்த்து, "ஏறிக்கொள்ளுங்கள். ஏறிக்கொள்ளுங்கள். இது உங்கள் கார்தான், உங்கள் பங்களாவுக்குப் போகலாம் சந்தேகம் வேண்டாம்" என்று வற்புறுத்தினர். தங்கம்மாளோ முதலில் தடுமாறினாலும் சற்று கழித்து ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போலும் காருக்குள் ஏறினாள். அவள் இரு பக்கங்களில் டைரக்டரும் முதலாளியும் அமர்ந்தனர் காரும் திருமண ஊர்வலக் காரைப்போல் கம்பீரமாக புறப்பட்டது; இரண்டு லட்சம் ரூபாய் நடிக நட்சத்திரமான மிஸ் அவதாரம் திக் பிரமை கொண்டு அசைவற்றுநின்று விட்டாள். உணர்ச்சிவந்தபோது டைரக்டரும் முதலாளியும் தன்னை அனாதையாகக் காட்டில் விட்டு விட்டுச் சென்றிருப்பதையும் சில்லரை நடிகைகளும் மற்ற சிப்பந்திகளும் தன்னைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்துக் கொண்டிருப்பதையும் கண்டாள் நேற்றிரவு, உதைத்து விரட்டிய அதே காமராக்காரர் இப்போது கேலிச்சிரிப்புச் சிரித்தபடி, யானை நடையிட்டுத் தன்னை நெருங்கி "காம்ன் மிஸ் அவதாரம். இந்தப்பணக்காரர்களே இப்படித்தான்- காரியமாகும் வரைக்கும் கண்ணே, மூக்கே என்று கெஞ்சிக் கூத்தாடி திருவடி பூசை செய்வார்கள். காரியம் தீர்ந்தாலோ: வேறு பெண் கிடைத்தாலோ கட்டிச்சோற்றை தின்று மிளகாய் துண்டை எடுத்தெறிவது போல் எறிந்து உதறித் தள்ளி விட்டுப் போய் விடுவார்கள். அந்தச் சுயநல மகளைப்பற்றி கவலைப் படாதே நான் எப்போதும் உனக்குத் துணையிருக்கேன், உன்னாலே நான் முன்னேறினேன். என்னாலே நீ முன்னுக்கு வந்தாய். அந்த விசுவாசத்தை மறக்கலாமா? கவலை விடு. போதும், நீயும் நானும் ஜோடி. போகலாம் வா வீடு நாடி" என்று கூறிக் கையைப் பற்றினான். அவதாரமோ அவன் கையை உதறிவிட்டு, வெடுவெடென ஆத்திரத்தோடு சென்று தன் காரில் அமர்ந்து ஓட்டலானாள்.

## அத்தியாயம் 4

"காமாட்சி நாதனின் மனைவி தங்கம்மாள் வீட்டைவிட்டு ஓடி விட்டாள் வேறே எவனையோ இழுத்துக் கொண்டு"

"காமாட்சி கட்டிய மனைவியைக் கொன்று இரகசியமாகப் புதைத்து விட்டான். போலீஸ் புலன் விசாரணை தீவிரமாக நடக்கிறது"

"சமத்துவம் பேசித்திரிந்த சண்டாளன், அப்பாவி ஆம்படையாளை படுத்திய பாட்டில் அவள் எங்கோ குளத்திலோ கிணற்றிலோ விழுந்து ஐயோவென்று உயிர் விட்டாள்" "வேறொரு பெண்ணின்மேல் ஆசைகொண்டு காமாட்சிநாதன் முதல் மனைவியை தாய் வீட்டுக்கு அடித்து ஓட்டி விட்டான். ஐயோ அடித்தாலும் அழத்தெரியாத அப்பாவி பெண்பிள்ளையை ஆணாய்ப் பிறந்தவன் தனக்குத்தான் கையிருக்கு, வாயிருக்கு அதிகாரமிருக்கு, என்று இப்படியும் சித்திரவதை செய்யலாமா? அந்தப் பராசக்திற்குத்தான் பொறுக்குமா? அதனால் தான் அவள் அவனை வீட்டை விட்டு ஓடும்படி தூண்டி விட்டாள்" என்று இதுபோன்ற பேச்சுக்களே தெருத் தெருவாய் வீடு வீடாக முழங்கிக் கொண்டிருந்தன. காமாட்சிநாதன் பேரில் அனுதாபப்பட்டு தங்கம்மாளை தேடியவர்கள் சிலர். தங்கம்மாளின் பேரில் இரக்கத்தால் தேடியவர் சிலர். ஆனால் தங்கம்மாள் இந்த ஊராருக்கும் உறவினர்களுக்கும் கடுக்காய் கொடுத்து விட்டு இரவு வண்டியிலேயே பட்டணம் சென்றடைந்து விட்டாள் என்ற விவரம் முன் அத்தியாயத்திலே குறிப்பிடப் பட்டிருக்கிறது

தங்கம்மாள் வெளியேறியதன் பிறகு காமாட்சிநாதன் வீடு வெரிச்சென்று இருந்தது போன்றே அவனுடைய உள்ளமும் வாழ்க்கையும் வெரிச்சென்றும் களையிழந்து மிருந்தன. போதாக்குறைக்கு நகச்சுற்றின்மேல் நாற்காலி விழுந்தது போல மேற்படி ஊர்ப்புரளி வேறே அவனை கசையடி போல் சித்திரவதை செய்தது. அவமானமும் துக்கமும் கவலையும் அவனை வெளியில் தலைகாட்டமுடியாது செய்தன. இந்த சம்பவம் ஏற்பட்ட சில நாட்களுக்குள் அவன் உத்தியோகத்திலும் நீண்ட ரஜா எடுத்துக்கொண்டான். பொது சேவை வேலைகளையும் ரத்து செய்துவிட்டான். வெளியில் போவதையும் சிறுகச் சிறுக குறைத்துக் கொண்டு வீட்டில் அடைபட்டுக் கிடக்கலானான், நாற்காலி மனிதனாகவோ தனிப் படுக்கையாளியாகவோ இருந்து துக்கத்தால் குமுறினான். உண்பதும் உறங்குவதும் அவனுக்கு சில நாட்களில் வேப்பங்காயாகி விட்டது. முன்பே ஊரார் உறவினால் நோயைச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். இப்போது கவலையும் மன நொடிவும் உண்டானதும், நோய் வேகம் வெளிக்காணலாயிற்று. இப்போது அவனை நாடுவார் சீந்துவாரில்லை. ஊர் செல்வாக்கில் அடைந்த நண்பர்கள் எல்லாம் இப்போது வெறும்வாய் உபசாரத்துடன் நழுவத் தலைபபட்டனர். வைத்திய நண்பர்களோ கைமேல் பணத்தில் கருத்தாயிருந்தனர். பொது ஜனத் தொண்டர்களுக்குத்தான் வரவுக்குமேல் செலவு எப்போதும் இருக்குமே. ஆபத்துக்காலத்துக்கு மிச்சப் படுத்தி வைப்பதெங்கே? "நமக்கு எல்லாம் தெரிந்தவர்கள். எல்லாரும் கையுதவிக்கு ஓடிவருவார்கள் என்று வீண் நம்பிக்கை கொண்ட ஏமாளிகள்தானே தேச சேவை; சமுதாய சேவைக்காரர்கள்? இந்த கதிக்கு காமாட்சி நாதனும் விதிவிலக்கில்லாமலிருந்தான். படுக்கையில் படுத்ததும் கஞ்சித் தண்ணீருக்கும் காசில்லாமல் தவிக்கலானான். சில பணக்கார இரகசிய சிநேகிதர்கள் மாத்திரம் தங்கள் கணவன்மாருக்கு தெரியாது இரகசியமாக வந்து வாயுபகாரமும் பணவுபகாரமும் செய்து வந்தனர். அவர்களின் உதவியாலும் சிபார்சினாலும் புதிதாகத் தொழிலில் நுழைந்துள்ள டாக்டர் மிஸ் வஞ்சிபாய் என்பவள் காமாட்சி நாதனுக்கு வைத்தியம் செய்ய தொடங்கினாள். வஞ்சிபாய் பணத்துக்காக ஆசைப்பட்டு இந்த உபகாரம் செய்ய முன்வரவில்லை. காமாட்சிநாதன் நல்ல பொது ஜன செல்வாக்குள்ளவன். அவன் சுகப்பட்டெழுந்தால் மீண்டும் அந்த செல்வாக்கை அடைந்துவிடலாம். இப்போது தனக்கும் அவனுடைய சிபார்சினால் செல்வாக்கு பெருகும் என்ற ஆசையால்தான் இப்போது அதிக அக்கரையோடு இராப்பகலாகப் பக்கத்திலிருந்து காமாட்சி நாதனை கவனித்து வந்தாள். வஞ்சிபாயின் அன்பு பராமரிப்பிலே மருந்திலே காமாட்சிநாதன் பழைய காமாட்சி நாதனான். அத்துடன் தங்கம்மாளைப் பற்றிய நினைவையும் மறக்கும்படி செய்து அந்த இடத்தை அபகரிக்கவழி கோலி வெற்றியும் அடைந்தாள் டாக்டர் மிஸ் வஞ்சி.

நோய் தீர்ந்த இரண்டொரு மாதங்களுக்குள் டாக்டர் வஞ்சிபாய் மிஸ்ஸஸ் காமாட்சிநாதனாக மாறினாள். அதன் மீது வைத்தியத்திலும் செல்வாக்கு மின்சாரவிசை வேகத்தில் வளர்ந்தது. காமாட்சி நாதனுக்கிருந்த செல்வாக்கையும் மீறி விட்டாள் டாக்டர் வஞ்சிபாய். அவளுடைய புகழையும் செல்வாக்கையும் கண்டு தொடக்கத்தில் மனம் பூரித்தான் காமாட்சிநாதன். அவளுடைய யோசனையின் படியே அவனும் பாங்கி வேலையை உதரித் தள்ளிவிட்டு ஆம்படையாளுக்கு வைத்தியத்தில் கிராக்கி பிடிக்கும் ஏஜண்டாகி பிறகு நிர்வாகப் பொறுப்பாளியானான்.

சம்பாத்திய உத்தியோகம் போய் வீட்டு உத்தியோகமாக மாறியதும் காமாட்சி நாதனின் மதிப்பும் குறையலாயிற்று. அவனுடன், டாக்டர் வஞ்சிபாய் நடத்திய ஆரம்பக் காதல் வாழ்க்கை எல்லாம் விரைவில்மங்கி ஆம்படையாளின் அதிகார ஆட்சி தலைதூக்கலாயிற்று. அடுத்தபடி அடுப்பங்கரை உத்தியோகத்தையும் காமாட்சி நாதனே கவனிக்க வேண்டிய கதியும் வந்து வாய்த்தது, அடுப்பங்கரையிலிருக்கவேண்டிய பெண்டாட்டி யாத்தாள் ஊர் சுற்றி சம்பாதித்து வந்து கொட்டினால், உத்தியோகத்திலிருக்க வேண்டிய புருஷன்காரன் ஆக்கிக் கொட்டி உபசரித்து, மனைவியின் கால் பிடிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அப்பாவியான தங்கம்மாள் மீது கூறிய அபாண்டப் பழிகளும், அவளை செய்த கொடுமைகளும் தான் இப்படி வஞ்சிபாயாக உருவெடுத்து வந்து தன்னை வாட்டுகின்றதோ என்று எண்ணி எண்ணி இராப்பகலாகக் கண்ணீர் வடித்துத் தத்தளித்தான் காமாட்சி நாதன். வஞ்சிபாய் அழகி என்றும் சொல்லமுடியாது. ஆனால் பணச் செருக்கினால் கம்பீர தோற்றம் படிந்திருந்தது. தங்கம்மாளோ அழகுத் தெய்வம். கள்ளமற்ற காதல் உள்ளம் படைத்தவள். நாயகனை கண்கண்ட தெய்வமாகப் பூஜித்து வந்தவள். இந்த ஒப்பனைகள் காமாட்சிநாதனின் மனத்தில் சதா நர்த்தன மிடத் தொடங்கின. தங்கம்மாளை எண்ணி எண்ணித் தவித்தான் தனிமையில் இருக்கும்போது, வஞ்சிபாயின் முன்னாலோ அடிமை போல் அடங்கி ஒடுங்கி ஓடியாடி வேலை செய்வான். அவளுடைய அதட்டல் குரல் கேட்டு நடுங்குவான். நாளடைவில் வஞ்சிபாய் தன் ஆண் சிநேகிதர்களை பகிரங்கமாக வீட்டுக்கழைத்து வருவாள். வைத்திய அறையிலே நடக்கும் நாடகங்கள் காமாட்சி நாதனின் பொறுமைக் கண்களுக்கும் யூகத்திற்கும் எட்டாமல் போகுமா என்ன?


டெலிபோன் : 86729.

**நியூடன் அண்டு கம்பெனி,**

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.



எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B ரங்கநாதன்

சந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 2—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 4—0—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

ஏஜண்டுகள் தேவை

காரியாலயம்

33 திருவேங்கிட முதலித் தெரு, பெரியமெட்டு. சென்னை, 3.


Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2. Jt: Editor; PIVIAR.